விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 தாளம் 59 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 25 திங்கட்கிழமை (10.09.2012) | பக்கங்கள்: பதினாறு

# மு.கா. ஆதரவளித்தால் மட்டுமே கிழக்கில் ஆட்சியமைக்க தமிழரசுக் கட்சிக்கு வாய்ப்பு


வெற்றிக் களிப்பில் இரா.சம்பந்தன் எம்.பி , முன்னாள் முதல்வர் சி.சந்திரகாந்தன்...

## மூன்று மாகாணத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வெற்றி

(நமது நிருபர்)

நடைபெற்று முடிந்த மாகாணசபைகளுக்கான தேர்தல் முடிவுகளின்படி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மூன்று சபைகளிலும் கூடுதல் ஆசனங்களை பெற்று முன்னணியில் உள்ளது. கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கணிசமானளவு ஆசனங்களைப் பெற்றுள்ள போதும் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு இல்லாமல் அது ஆட்சியமைக்க் முடியாத நிலை உள்ளது. 02

## "ரணில் ஆதரவு தெரிவித்துள்ளார் மு.கா.வின் ஆதரவை பெறவும் முயற்சி"

### இரா.சம்பந்தன்

(திருகோணமலை)

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் பேசுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தியுள்ளதாகவும் அவர் எமக்கு ஆதரவு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி தெரிவித்தார்.

இந்த நிலையில் அடுத்தகட்ட நகர்வு குறித்துப் பரிசீலித்து வருகின்றோம் எனவும் அவர் கூறினார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு 2 போனஸ் ஆசனங்கள் உட்பட 14 ஆசனங்களும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 11 ஆசனங்களும் கிடைத்துள்ளன. 02

## எனது தலைமையில் இது பத்தாவது வெற்றி



(கொழும்பு)

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோக வெற்றி பெற்றுள்ளது.

இந்த தேர்தலை நியாயமாகவும் நேர்மையாகவும் நடாத்தி சிறந்த ஒரு மக்கள் ஆணையை பெற்றுக் கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தேர்தல்கள் ஆணையாளர் திணைக்களத்திற்கும், ஆளும், எதிர்க்கட்சி சகல வேட்பாளர்களுக்கும், பாதுகாப்பு தரப்பினருக்கும், விசேடமாக இந்த மாகாணங்களைச் 02

## ஆதரவளிப்பதும் விடுவதும் மு.கா.வின் கைகளில் உள்ளது

### சுரேஷ் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைப்பதற்கு தேவையான ஆதரவை பெறுவதற்காக முஸ்லிம் காங்கிரசுடன் தொடர்ந்து பேசி வருகிறோம். ஆதரவு தருவதும் தராமல் விடுவதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கையிலேயே உள்ளது என தெரிவித்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கிழக்கில் நான்கு ஆசனங் 02




## "சம்பந்தனிடமிருந்து முதல் அழைப்பு வந்தது; ஜனாதிபதியும் அழைத்துள்ளார்"

### சிரேஷ்ட உறுப்பினர்களுடன் பேசியே முடிவெடுப்போம் - ஹக்கீம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபையில் தனித்து ஆட்சி அமைப்பதற்கு தேவையான ஆசனங்களை எந்தவொரு கட்சியும் பெறாத நிலையில், கிழக்கில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சிரேஷ்ட உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பின்னரே இறுதி தீர்மானம் எடுக்கும் என அக்கட்சியின் தலைவர் 02



## துரத்தித் துரத்தி வாள் வெட்டு: திருநெல்வேலியில் இளைஞன் பலி

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி சிவன் கோயிலை அண்மித்துள்ள பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவன் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். நேற்று மாலை 5 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 02



## 12 இலட்சம் பேர் வாக்களிக்கவில்லை

(கொழும்பு)

நடந்து முடிந்த கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணசபைத் தேர்தல்களின் போது பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் சுமார் 12 இலட்சம் பேர் வாக்களிக்கவில்லை என தெரியவருகிறது.

சுமார் 21இலட்சத்து 38ஆயிரம் பேர் வாக்களித்துள்ளனர். அவற்றில் சுமார் ஒரு இலட்சத்து 26ஆயிரம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 02

## மூன்றாவது அரசியல் சக்தி என்ற அந்தஸ்தை இழந்தது ஜே.வி.பி

(கொழும்பு)

வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) படுதோல்வி அடைந்துள்ளது.

மூன்று மாகாணங்களிலுமுள்ள ஏழு மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிட்ட ஜே.வி.பி. 32 ஆயிரத்து 384 வாக்குகளை மாத்திரம் பெற்று ஒரே ஒரு ஆசனத்தை மட்டும் பெற்றிருக்கின்றது. 02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# கிழக்கில் இன ஒற்றுமைக்காக தொடர்ந்து உழைப்போம்

- அமைச்சர் சுசில்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்ற மாகாண சபைகளின் அபிவிருத்தியை மேலும் பலப்படுத்த அரசாங்கம் தம்மை அர்ப்பணிக்கும் என முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களில் தொடரும் ஆட்சிக் காலத்தில் மக்கள் எதிர்பார்க்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பலமாக முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதிலும் மாகாண அபிவிருத்தி நடவடிக்கையினை காத்திரமானதாக முன்னெடுப்பதிலும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நடந்து முடிந்த மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னிணி மகத்தான வெற்றி பெற்றுள்ளதையடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளித்த அனைத்து மக்களுக்கும் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் அமைச்சர் நேற்று நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

சுதந்திரமும் நீதியும் அமைதியுமான தேர்தலை நடத்தி முடிப்பதற்கு. பூரண ஒத்துழைப்பு வழங்கிய தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் துறையினருக்கும் கட்சியின் சார்பில் அவர் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

# ஐ.நா.குழு சிவில் சமூக பிரதிநிதிகளை சந்திப்பர்

எதிர்வரும் 14ம் திகதி முதல் 20ம் திகதி வரையில் ஐக்கிய நாடுகள்மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகள் இலங்கையில் தங்கியிருப்பார்கள் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளைப் பேச்சாளர் சின்டியா வெலிக்கோ தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், இந்தக் குழுவினரின் நிகழ்ச்சி நிரல் குறித்தததகவல்களை வெளியிட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆசிய பசுபிக், மத்தியகிழக்கு, வட ஆபிரிக்க விவகாரங்களுக்கு பொறுப்பான ஹானி மெக்காலி தலைமையிலான குழுவினரே இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

# ஆபிரிக்க வர்த்தகக் குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் முன்னேற்ற வர்த்தக குழுவின் பிரதிநிதிகள் யாழ். மாவட்டத்திற்கான விஜயத்தனை கடந்த சனிக்கிழமை மேற்கொண்டனர்.

இதன்போது, மாவட்ட செயலாளர் எஸ்.அருமைநாயகம் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க உள்ளிட்ட பலரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

# 12 இலட்.(தொடர்)

தேர்தல் முடிவுகளின்படி பதிவு செய்யப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை 3336417 ஆகும். அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 2138739. இவற்றில் செல்லுபடியான வாக்குகள் 2012312 என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2008ஆம் ஆண்டு இந்த மூன்று மாகாணங்களுக்கும் நடைபெற்ற தேர்தலில் வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கையைவிட இவ்வருடம் வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2008ஆம் ஆண்டு தேர்தலில் 10 இலட்சத்து 26 ஆயிரம் பேர் வாக்களித்திருக்காத நிலையில், இம்முறை தேர்தலில் சுமார் 12 இலட்சம்பேர் வாக்களிக்கவில்லை.

வடமத்திய மாகாணத்தில் 3 இலட்சத்து 20 ஆயிரம் வாக்காளர்களும், சப்ரகமுவ மாகாணத்தில் 5 இலட்சத்து 22 ஆயிரம் வாக்காளர்களும், கிழக்கு மாகாண சபையில் 3 இலட்சத்து 55 ஆயிரம் வாக்காளர்களும் இம்முறை வாக்களிக்கத் தவறியுள்ளனர்.

கடந்த 2008ஆம் ஆண்டு வடமத்திய மாகாணத்தில் 2 இலட்சத்து 73 ஆயிரம் வாக்காளர்களும், சப்ரகமுவ மாகாணத்தில் 4 இலட்சத்து 27 ஆயிரம் வாக்காளர்களும், கிழக்கு மாகாணத்தில் 3 இலட்சத்து 36 ஆயிரம் வாக்காளர்களும் வாக்களித்திருக்கவில்லை.

அதேநேரம், கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது இம்முறை மூன்று மாகாண சபைகளிலும் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் இம்முறை தேர்தலில் ஒரு இலட்சத்து 27 ஆயிரம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

எனினும் கடந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலில் வாக்களிக்கச் செல்வோருக்கான சகல ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் சகல இலங்களிலும் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எனது தலைமையில்..(தொடர்)

சேர்ந்த சகல பொது மக்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

நடைபெற்ற மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பாக வெளியிட்டுள்ள விசேட செய்தியிலேயே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

எனது தலைமையில் 2005ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்று வரும் தேர்தலில் 10வது வெற்றியான இந்தத் தேர்தல் இலங்கையின் வரலாற்றில் இடம் பிடித்துள்ளது.

தேசிய மக்கள் கருத்து கணிப்பாக இம்முறை நடைபெற்ற இந்த தேர்தல் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் கருத்துக்களை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

ஜனநாயகத்தை பலப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட எமது அபிவிருத்தி வேலைத்திட்டத்தை எதிர்காலத்தில் மேலும் மேலும் முன்னெடுத்துச் செல்ல பலம் கிடைத்துள்ளது.

அதேபோன்று இன, மத, குல, பேதங்களை காண்பித்து குறுகிய வெற்றியை எதிர்பார்த்திருந்த அனைத்து சக்திகளையும் தோல்வியடையச் செய்து, இலங்கையின் தேசம் மற்றும் அரசின் மீது நம்பிக்கை வைத்த மக்கள் தொடர்பில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஒரு இலக்கை நோக்கி வெற்றிகரமாக நெருங்கக் கூடியதாக இருப்பது வெற்றியாளரைப் போன்று தோல்வியாளரும் இணைகின்ற போதே ஆகும்.

எனவே நாடு எதிர்நோக்கும் சவால்களின் போது பொறுப்புடனும் ஒன்றிணையுமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஆதரவளிப்பதும்...(தொடர்)

களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி தமக்கு ஆதரவளிப்பதற்கு தயாராக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக படியான ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றால் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் கூட்டமைப்பு ஆட்சியமைக்க ஆதரவளிக்கும் என ஏற்கனவே கூட்டமைபின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. தெரிவித்திருந்தார். இந்நிலையில் நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகளின்படி கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதினொரு ஆசனங்களை பெற்றுள்ளது. இந்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்புக்கு ஆதரவளித்தால் கூட்டமைப்பினால் கிழக்கில் ஆட்சியமைக்கக் கூடிய சாத்தியப்பாடு உள்ளது.

இந்நிலைமை தொடர்பாக கேட்ட போதே சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரி விக்கையில் கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸை இணைத்துக்கொண்டு கிழக்கில் ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக தேர்தலின் பின்னரும் முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் திட்ட வட்டமான, உறுதியான முடிவு எதனையும் தெரிவிக்கவில்லை தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்.

கிழக்கில் ஆட்சி யமைக்க ஆதரவு தருவதும், தரா மல் இருப்பதும் அவர்களின் கைகளிலேயே உள்ளது.

இது இவ்வாறு இருப்பினும் கிழக்கில் நான்கு ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி எமக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

இதன்படி எமது தரப் பில் 15 ஆசனங்கள் உள்ளன. எனவே முஸ்லிம் காங்கிரஸ் ஆத ரவளித்தால் கிழக்கில் எம் மால் ஆட்சியமைக்க முடியும் எனவும் சுரேஸ் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார்.

# மூன்றாவது அரசியல்...(தொடர்)

இந்நாட்டின் மூன்றாவது பிரதான அரசியல் சக்தியாகக் கருதப்பட்ட ஜே.வி.பியை நாட்டு மக்கள் நிராகரித்து விட்டதையே இது காட்டுவதாக பிற கட்சிகள் கூறுகின்றன.

மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் திகாமடுல்ல, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை, அநுராதபுரம், கேகாலை, இரத்தினபுரி ஆகிய ஏழு மாவட்டங்களிலும் நேற்று முன்தினம் நடைபெற்றது. இத்தேர்தலில் அநுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் 16 ஆயிரத்து 66 வாக்குகளைப் பெற்றே ஜே.வி.பி. ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ளது.

ஜே.வி.பியின் கொள்கைகளை நாட்டு மக்கள் ஒதுக்கித் தள்ளி விட்டதையே இத்தேர்தல் முடிவு காட்டுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# ரணில் ஆதரவு தெரிவித்துள்ளார்...(தொடர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 07 ஆசனங்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 4 ஆசனங்களும் கிடைத்துள்ளன. இந்த நிலையில், தமிழரசுக் கட்சியின் அடுத்தகட்ட அணுகுமுறை எவ்வாறாக இருக்கும் என்று வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

திருகோணமலை மாவட்டத்தில் இன்னொரு ஆசனத்தை கூடுதலாக பெற்றிருக்கலாம். பொதுவாக தமிழ் வாக்காளர்கள் கிழக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நன்றாக வாக்களித்துள்ளார்கள் எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

# மு.கா.ஆதரவளித்தால்...(தொடர்)

இதனால் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்தால் மட்டுமே கிழக்கில் தமிழரசுக் கட்சியினால் ஆட்சி அமைக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. சபரகமுவை மற்றும் வடமத்திய மாகாணசபைகளில் தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய பெரும்பான்மை பலத்தை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனித்து ஆட்சியமை போதுமானது. கிழக்கு நிலவரத்தை பொறுத்தவரையில், 35 உறுப்பினர்களைக் கொண்ட கிழக்கு மாகாண சபையில் தேர்தல் முடிவுகளின் படி, 31.58 சத வீத வாக்குகளைப் பெற்று மட் டக்களப்பு - 4 ,திருகோணமலை- 3,அம்பாறை - 5 என்ற எண்ணிக் கையில் 12 ஆசனங்களை மாவட் டங்கள் ரீதியாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுள்ளது.

மாகாண மட்டத்தில் கூடுதல் வாக்குகளை பெற்ற கட்சி என்ற ரீதியில் இரண்டு போனஸ் ஆசனங்கள் அடங்கலாக மொத்தம் 14 ஆசனங்களை அக்கட்சி கைப்பற்றியுள்ளது.

30.59 சதவீத வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கை தமிழரசுக் கட்சி) மட்டக்களப்பு - 6, திருகோணமலை - 3 ,அம்பாறை - 2 என்ற எண்ணிக்கையில் 11 ஆசனங்களை வெற்றிகொண்டுள்ளது.

20.98 சதவீத வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை - 4, திருகோணமலை -2 ,மட்டக்களப்பு - 1 என்ற எண்ணிக்கையில் 7 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியால் 11.82 சதவீத வாக்குகளுடன் திருகோணமலை -1,அம்பாறை- 3, மொத்தமாக 4 ஆசனங்களையே பெறமுடிந்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தனித்து போட்டியிட்ட ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணியின் பங்காளிக் கட்சியான விமல் வீரவங்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னனி ஒரு ஆசனத்தை பெற்றுள்ளது.

கிழக்கில் 2008 ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் முடிவுகள்படி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 20, ஐக்கிய தேசிய கட்சி - 13, மக்கள் விடுதலை முன்னனி - 1, தமிழ் ஜனநாயக தேசிய முன்னனி -1 என்ற எண்ணிக்கையில் ஆசனங்களை பெற்றிருந்தன.

கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களை உள்ளடக்கிய சபரகமுவை மாகாண தேர்தல் முடிவுகளின்படி, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 28 ஆசனங்களையும், ஐக்கிய தேசிய கட்சி - 14 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

இதேவேளை, வடமத்திய மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 21,ஐக்கிய தேசிய கட்சி - 11, மக்கள் விடுதலை முன்னணி - 1 என ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

# சம்பந்தனிடம்...(தொடர்)

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மாகாணத்தில் ஆட்சியை ஏற்படுத்துவது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடமிருந்து தனக்கு முதலாவதாக தொலைபேசி அழைப்பு வந்தது என அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வருமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்ததாகவும் ஹக்கீம் தெரிவித்தார்.

கட்சியின் வெற்றிக்காக பாடுபட்டவர்களுக்கு நன்றி தெரிவிக்க நான் முதலில் கடமைப்பட்டுள்ளேன். முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட அனைத்து தொகுதிகளிலும் நாம் வெற்றியடைந்துள்ளோம்.

மாகாண சபை ஆட்சியை அமைப்பதற்கான ஆதரவினை யாருக்கும் வழங்குவதற்கு முன்னர், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நான் கலந்துரையாட வேண்டும். எவ்வாறாயினும் அர்த்தமுள்ள அதிகார பரவலாக்கம் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை உருவாக்குவதற்கு ஆதரவளிப்போம் என அவர் தெரிவித்தார்.

# துரத்தித் துரத்தி...(தொடர்)

சம்பவத்தில் மரணமான இளைஞனின் வீட்டிற்கு சென்ற சிலர் அவரை வெளியில் அழைத்துச்சென்று துரத் தித்துரத்தி வெடடியதாக தெரி விக்கப்படுகிறது.

சம்வபத்தில் உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் ஜெயசீஸ்தன் (வயது-28) எனத் தெரியவருகிறது. காயமடைந்தவர் ரத்தினசிங்கம் விமலராஜ் என்பவர் ஆவார். சம்பவ இடத்திற்கு சென்ற கோப்பாய் பொலிஸார் ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டனர்.

# மூன்று மாத காலத்தில் 500 வாள்வெட்டுச் சம்பவங்கள் பதிவு

யாழ்.மாவட்டத்தில் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் 500 வாள்வெட்டுச் சம்பங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எரிக் பெரெரா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பிரதி பொலிஸ் மா அதிபர்,

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நடைபெறுகின்ற மோதல்களின் போது இடம்பெற்றதான அடிப்படையில் 500 வாள்வெட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 6 பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் இல்லாதவாறு பாலியல் வன்புணர்வச் சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ளன.

அந்த வகையில் கோப்பாய் பகுதியில் 15 வயது நிரம்பிய பாடசாலைச் சிறுமி 31 வயதுடைய நபரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படத்தப்பட்டுள்ளார்.

கொடிகாமப் பகுதியில் பெரிய தாயாரின் கணவனினால் 18 வயதுடைய மனநிலை பாதிக்கப்பட்டுள்ள இளம் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் என்று அவர் மேலும் கூறினார்.

# தென்னாபிரிக்க இராஜதந்திரிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

தென்னாபிரிக்கா பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இக்குழுவினர் யாழ்.ரில்கோ ஹோட்டலில் வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன்,

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர்.

# வவுனியாவில் 76 பேருக்கு சுயதொழில் உதவிகள்

சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்தை மீளக்கட்டியெழுப்பும் செயல் திட்டத்தின் கீழ் 76 பயனாளிகளுக்கு சுயதொழில் கடன் வழங்கப்பட்டுள்ளன என வவுனியா மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் செ.சிறிநிவாசன் தெரிவித்தார்.

வெண்கலச்செட்டிகுள பிரதேச செயலாளர் பிரிவில் சூடுவெந்த புலவு கிராம அலுவலகர் பிரிவில் பயனாளி ஒருவருக்கு கடந்த வியாழக்கிழமை சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் கையளிக்கும் மூன்றாம் கட்ட வைபவம் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தொவித்த அவர்,

இத்திட்டத்தின் ஊடாக எதிர்வரும் காலத்தில் 33 பயனாளிகள் நன்மை பெறவுள்ளதுடன் ஏற்கனவே சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்ட 76 பயனாளிகளும் பயனடைந்து வருவதாகவும் இத்திட்டமானது முரண்பாடுகளால் பாதிப்படைந்த பல்வேறு தரப்பினரையும் பொருளாதார ரீதியில் மேம்பட வைக்க உதவுவதுடன் வறுமையை ஒழிக்கும் செயற்பாட்டின் ஒரு கட்டமெனவும் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

(வலிகாமம்)

யாழ்.மாவட்ட றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் சேவையின் ஊடாக சமாதானம் என்னும் கருப்பொருளிலான கருத்தரங்கு ரில்கோ ஹோட்டலில் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.தியாராசா பிரதம விருந்தினராக் கலந்துகொண்டார்கள்.

# ரி.என்.ரி.ரக வெடிபொருள்: பூநகரியில் இருவர் கைது

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் ரிஎன்ரி வெடி பொருட்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் அப்பகுதியில் வாகனம் ஒன்றில் ரி.என்.ரி வெடி பொருட்களைக் கொண்டு சென்ற யாழ்ப்பாணம் குருநகரைச் சேந்த இருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை செய்யப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# அவுஸ்திரேலியப் பயணம்: சனியன்று 146 பேர் சிக்கினர்

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு பயணிப்பதற்கு முற்பட்ட 146 பேர் திருகோணமலையில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படைத் தெரித்துள்ளது.

திருகோணமலைக்கு கிழக்கேயுள்ள கடற்பரப்பில் இரண்டு படகுகளில் இருந்தபோது நேற்று முன்தினம் அதிகாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் கைது செய்யப்பட்டவர்களில் 107 ஆண்களும் 16 பெண்களும் 23 குழந்தைகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை துறைமுகத்தில் அழைத்துவரப்பட்ட இந்தக் குழுவினர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும்,

இவர்கள் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு வவுனியா மட்டக்களப்பு சிலாபம் கிளிநொச்சி திருகோணமலை மன்னார் பகுதிகளை. சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

# நெல்லியடியில் புலிக்கொடி: இரண்டு சந்தேக நபர்கள் விசாரணைக்காக அழைப்பு

## யாழ்.பொலிஸ் மா அதிபர்

யாழ்.நெல்லியடிப் பகுதியில் புலிக்கொடி காட்டிய விவகாரம் தொடர்பாக சந்தேக நபர்கள் இருவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர் என யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம், நெல்லியடி பகுதியில் நில சுவீகரிப்பு தொடர்பாக நடைபெற்ற ஆர்பாட்டத்தின் போது மோட்டார் சைக்கிள்களில் வந்தோர் புலிக்கொடியை ஏந்தியவாறு வீதியில் வலம் வந்தனர். மேற்படி மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடுகள் புலன் விசாரணையின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த இலக்கததகடுகளில் ஒன்று மோட்டார் சைக்கிளொகன்றுக்குரியது என்றும் மற்றையது முச்சக்கரவண்டியொன்றுக்கு உரியது என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

மோட்டர் சைக்கிளின் இலக்கத் தகட்டின் அடிப்படையில் அதன் உரிமையாளர்கள் இருவர் இனம் காணப்பட்டுள்ளனர். இருவரும் தென்பகுதியைச் சேந்தவர்களாவர். ஒருவர் கொழும்பு 15ஐச் சேர்ந்தவர்.

மற்றைய நபர் ஜா - எல பகுதியைச் சேந்தவர். முஸ்லிம் மற்றும் சிங்கள இனத்தைச் சேர்ந்த இவர்கள் இருவரையும் விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளோம்.



புலிக்கொடி காட்டியமை தொடர்பான வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி விசாரணை செய்யப்படவுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

# லேகியம், மூக்குப்பொடி விற்பனை: வர்த்தகர்களுக்கு அபராதம்

தடை செய்யப்பட்ட மூக்குப் பொடி, மற்றும் லேகியம் விற்பனை செய்த இருவருக்கு 6 ஆறாயிரம் ரூபா அபராதம் விதிக்க யாழ்.நீதிவான் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

நல்லூர் பகுதியில் யாழ்.மதுவரி நிலையத்தினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது குறித்த பகுதியில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூக்குப்பொடி மற்றும் லேகியம் விற்பனை செய்த இரு வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்விரு வர்த்தகர்களும் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களுக்கு தலா மூவாயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

# இரண்டாம் கட்ட எண்ணெய் அகழ்வாராய்ச்சி பணிகள் அடுத்த வருடத்தின் முற்பகுதியில்

## கெய்ன் நிறுவனம்

மன்னார் கடற்பரப்பில் இரண்டாவது கட்ட எண்ணெய் அகழ்வாராய்ச்சிப் பணிகளை அடுத்த வருடத்தின் முதற்காலாண்டுப் பகுதியில் நடத்தவுள்ளதாக கெய்ன் இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது.

மன்னார் கடற்பரப்பில் தனது முதற்கட்ட அகழ்வாராய்ச்சிப் பணியின் போது 3 எரிவாயுக் கிணறுகளை இந்திய நிறுவனமான கெய்ன் தோண்டியிருந்தது.

இதில் சிலவற்றில் எரிவாயு காணப்படுவதனை அது உறுதி செய்திருந்ததுடன் அதன் வணிக ரீதியான பெறுமதியினை இதுவரை உறுதிசெய்யவில்லை.

ஆனால் 3 ஆம் கிணற்றில் ஒன்று வெறுமையாகக் காணப்படுவதாகக் கூறி அதனைக் கடந்த ஆண்டு டிசம்பரில் கைவிட்டுவிட்டது.

மேலும் ஆராய்ச்சிகளின் பின்னர் அடுத்த ஆண்டு நடுப் பகுதியில் இவற்றின் வணிகரீதியான பெறுமதி தொடர்பில் அந்நிறு வனம் அறிவிக்கவுள்ளது. அடுத்த வருடம் ஆரம்பிக்கப் படவுள்ள 2ம் கட்ட எண்ணெய் அகழ்வாராய்ச்சிப் பணியின் போது 4ஆவது கிணற்றைத் தோண்டவுள்ளதாக கெய்ன் இந்தியா நிறுவனம் தெரிவிக்கின்றது.

மன்னார் கடற்பரப்பில் 8 எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வாராய்ச்சிப் பகுதிகள் காணப்படுகின்றன.

# கோப்பாயில் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை

"கோப்பாய் சிறுவர் மகிழ்வகம் இயற்கையின் வலிமை ஊடான ஒருமைப்பாடு" என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலை

ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில ஆரம்பமானது.

இலங்கை கள பறவையியல் குழு, மற்றும் கொழும்பு பல்கலைக்கழக விலங்கியல்துறை இணைந்து டில்மா பாதுகாப்பு என்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் இப்பயிற்சிப் பட்டறை நடைபெறுகின்றது.

கல்வி அமைச்சு, தொண்டமைனாறு வெளிக்கள நிலையம் ஆகியவற்றின் பங்களிப்புடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள 60 பாடசாலை ஆசிரியர்களுக்கு நடாத்தப்படுகின்றது.

## இன்றைய இராசி பலன் (10.09.2012)

**நந்தன வருடம் ஆவணி திங்கள் 25 ஆம் நாள் திங்கட்கிழமை**

**நட்சத்திரம்** : திருவாதிரை பின்னிரவு 1.02 வரை அதன் பின் புநர்பூசம்
**திதி** : நவமி காலை 8.09 வரை. அதன் பின் தசமி
**சுபநேரம்** : 12.03 - 1.33
**இராகுகாலம்** : 7.33 - 9.03

**மேடம்** : மன அமைதி, பணவரவு, தொழில் நன்மை
**இடபம்** : பொருள் வரவு, காரிய சித்தி, குடும்ப சுகம்
**மிதுனம்** : முயற்சி தடை, ரோக பயம், வீண் பழிகேட்டல்
**கடகம்** : அலைச்சல், காரிய நஷ்டம், கடன்தொல்லை
**சிங்கம்** : தெய்வ அனுகூலம், நற்காரியம், முயற்சி பலிதம்
**கன்னி** : சுபகாரியச் செலவு, தொழில் மாற்றம், முயற்சிகேற்ப பலன்
**துலாம்** : பொருள் சேர்க்கை, மனமகிழ்ச்சி, நற்செய்தி
**விருச்சிகம்** : தேகநலம் பாதிப்பு, யோசனை மிகுதி, வாக்குவாதம்
**தனுசு** : நற்செய்கை, பணப்புழக்கம், பங்குத்தொழில் நன்மை
**மகரம்** : பொருள் விரயம், மனக்குமுறல், வீண்பழி கேட்டல்
**கும்பம்** : தனவரவு, தெய்வ அனுகூலம், பிரயாண சுகம்
**மீனம்** : புதிய முயற்சி, தொழில் விருத்தி, நட்புறவு

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

## வளிமண்டலவியல் திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் பயிற்சி தரத்திற்கு வளிமண்டலவியல் அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான

# திறந்த போட்டிப் பரீட்சை - 2012

# Open Competitive Examination for Recruitment of Meteorological Observers/ Communicators to the Training Grade of the Sri Lanka Technological Service - 2012

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் பயிற்சியளிப்புத் தரத்தில் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/ தொடர்பாடலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட இலங்கையரான ஆண்/ பெண் இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2.** பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

**3.** இந்தப் போட்டிப் பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தினால் 2012, நவெம்பர் மாதத்தில் உப பிரிவு இலக்கம் 1 இல் கொடுக்கப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை மையங்களில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் யாதேனும் மையத்திற்கு விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை போதியளவு காணப்படாவிடின், அந்தப் பரீட்சை மையம் இரத்துச்செய்யப்பட்டு அதற்கு விண்ணப்பித்தவர்கள் அருகில் உள்ள பரீட்சை மையத்திற்கு மாற்றப்படுவார்கள். பரீட்சை நடைபெறும் பரீட்சை மையங்கள் மற்றும் பரீட்சை மையங்களின் இலக்கங்கள் அட்டவணை இலக்கம் 1 இல் தரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களில் உரிய தலைப்புகளில் இந்தப் பரீட்சை மையங்கள் மற்றும் பரீட்சை மையங்களின் இலக்கங்கள் குறிப்பிடப்பட்ட ஒழுங்கின்படி பூர்த்திசெய்யப்பட வேண்டும். வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய நீர் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் இரண்டு நகரங்களை விருப்புத் தெரிவின்படி குறிப்பிட வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மற்றும் பரீட்சை மையம் என்பவற்றை பிறகு மாற்றிக்கொள்ள முடியாது.

**4. சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை.-** வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 70 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பதவிகளுக்கு அரச வர்த் தமானி அறிவித்தல் அல்லது பொது அறிவித்தல் ஊடாக விண்ணப்பம் கோரப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். (நேர்முகத் தேர்வுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.) அடுத்ததாக தகைமைகளைப் பூரணப்படுத்திய மற்றும் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண் ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பொது நிர்வாகச் சுற்றறிக்கை 15/ 19 மற்றும் அது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கக்கூடிய பொது நிர்வாக சுற்றறிக்கை களுக்கு அமைய இலங்கை தொழில்நுட்ப சேவையின் பயிற்சியளித்தல் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

**5. கல்வி மற்றும் வேறு தகைமைகள் :**

**5.1** வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக:- கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி க.பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

**(அ)** பௌதீகவியல், தூயகணிதம் மற்றும் பிரயோக கணிதம் அல்லது

**(ஆ)** பௌதீகவியல், தூயகணிதம் அல்லது பிரயோக கணிதம் அல்லது இணைந்த கணிதம் அத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஒன்று :-

இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல் மற்றும் விவசாயம் இவற்றுடன் மொழி அல்லது இலக்கியம், கணிதம். விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**5.2** விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரியின் வயது 18 இற்குக் குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற் போதும் அரச மற்றும் மாகாண பொதுச் சேவையில் உள்ளவர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.)

**5.3** விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

**5.4** விண்ணப்பதாரிகள் சிறந்த ஒழுக்கம் மற்றும் நல்ல உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**5.5** சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கையளிக்கப்படுவதற்கான கடைசி நாளன்று பதவிக்கு உரிய சகல தகைமைகளையும் கட்டாயமாக பூரத்தி செய்துள்ளவராக இருத்தல் வேண்டும்.

**6. விண்ணப்பம் செய்யும் முறை:-**

இந்த அறிவித்தலுடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய ஏ4 அளவிலான தாளில் ஒரு பக்கத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 4 (உ) வரை முதல் பக்கத்தில் உள்ளடக்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தனது கையால் நிரப்ப வேண்டும். உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2012.10.05 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு அஞ்சலில் **“பணிப்பாளர்நாயகம், வளிமண்டலவியல் திணைக்களம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு- 7”** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“வளிமண்டலவியல் அவதானிப் பாளர/தொடர்பாடலாளர் பதவி”** என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். தற்போதும் அரச/ மாகாண பொதுச் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தி கிடைக்கப்பெறும் அல்லது உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை (போட்டோ கொப்பி) தம்முடன் வைத்துக் கொள்வது பயனுள்ளதாகும். விண்ணப்பப்படிவத்தை ஒழுங்குபடுத்தும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துடன் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்படிவத்தில் தமிழுடன் ஆங்கிலத்திலும் எழுதுவது அவசியமாகும்.

**7.** பரீட்சை அனுமதி அட்டை, பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் பரீடசை நேர அட்டவணை என்பன விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் பரீட்சை மையத்தின் அதிபரிடம் கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்த விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட்ட உடனேயே இலங்கைப் பரீட்சைத் திணைகளம் அது தொடர் பாக செய்தித்தாள்களில் அறிவித்தல் செய்யும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களுக்குப் பிறகு அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லையானால், அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். தங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பணம் செலுத் திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி, பதிவு அஞ்சல் செய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை கொழும்புப் பிரதேசத்துக்கு வெளியே இருப்பவர்களாயின் அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கடித மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். அந்தக் கடிதத்தின் போட்டோப் பிரதியைத் தம்முடன் வைத்திருப்பது நல்லது.

**8.** எழுத்துப் பரீட்சையின்போது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டுப் பயண கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கீழ்ப்படிய வேண்டும். அந்த சட்டதிட்டங்களை மீறுபவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

**9.** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பம் செய்தல் வேண்டும் என்ற ஆரம்ப பணிப்பிற்கு ஏற்ப உரிய முறையில் விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்படுதல் விண்ணப்ப தாரி இந்தப் பதவிக்கு உரிய தகைமையைப் பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக்கொள்ளப்படும் என்று கருத முடியாது. எழுத்துப் பரீட்சையில் அதிக திறமை காட்டிய விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு தகைமை இருக்கின்றதா என்று பரீட்சிக்கப்படும்போது உரிய தகைமை இல்லை என்று காணப்படின், அவ்வாறானவர்கள் நியமனம் பெற்றுக்கொள்வதற்கு தகைமையற்றவர்கள் என்று கருதப்படுவார்கள்.

**10.** இந்த அறிவித்தலில் வெளிப்படுத்தப்படாத காரணங்கள் தொடர்பாகவும் மற்றும் நியமனம் வழங்கல் பற்றியும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின்பால் உள்ளது.

**11.** விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் கட்டளையிடும் அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அதிகாரி, ரூபா 2,37,060 இற்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண பொதுச் சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

**12.** பரீட்சைக் கட்டணம்:- பரீட்சைக் கட்டணமாக மீளப்பெற்றுக் கொள்ள முடியாத தொகை ரூபா 500 ஐ வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு இலங்கை வங்கி, டொரின்டன் சதுக்கக் கிளையின் கணக்கு இல.7042678 இல் வரவு வைக்கும்படி, எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் கழன்று விழாதவாறு ஒட்டி அனுப்பிவைக்க வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியை தம்வசம் வைத்திருப்பது நல்லது.

**13.** எழுத்துப் பரீட்சை.- இந்தப் போட்டிப் பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளின் ஊடாக நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் பரீட்சையின் போது சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடை அளித்தல் வேண்டும். கீழே குறிப்பிட்டுள்ளவாறு எழுத்துப் பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்:-

**(1)** நுண்மதிப் பரீட்சை

**(2)** தொழில்நுட்ப வினாப்பத்திரம்.

**14.** பாடப் பரிந்துரை - (1) நுணமதிப் பரீட்சை:- (காலம்: 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் - 100.

விண்ணப்பதாரியிடம் காணப்படும் பகுத்தறிவு, பகுப்பாய்வுத் திறன், முடிவு எடுத்தல் வல்லமை மற்றும் தீர்ப்பளித்தல் தொடர்பான வினாக்களின் சேர்க்கை.

(2) தொழில்நுட்ப வினாப்பத்திரம்.- (காலம் : 2 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100. பௌதீகவியல் பாடம் தொடர்பான க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை மட்டம் மற்றும் அதில் பெற்ற அறிவை பரீட்சித்தல்.

**15.** தெரிவுசெய்யும் முறை:- (1) தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் 40 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளில் இருந்து அதிக அளவான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளை நேர்முகத் தேர்வுக்கு அழைத்து தகைமைகள் பரிசீலனை செய்யப்படும் நேர்முகத் தேர்வுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தகைமையை நிறைவு செய்துள்ள மற்றும் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சியளித்தல் தரத்தில் நியமனம் வழங்கப்படும்.

**16.** மருத்துவப் பரிசோதனை:- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தாம் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் பணி புரிவதற்கான உடல் நலத்தைக் கொண்டிருக்கின்றார் என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தன்னை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும். மருத்துவ பரிசோதனையில் உடல் தகுதிபெறத் தவறிய விண்ணப்பதாரிகள் தகைமை அற்றவர்களாகக் கருதப்படுவர்.

**17.** சம்பள அளவுத்திட்டம்.- (6/ 2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதற்குரிய திருத்தங்களுக்கு அமைய) 6/ 2006 (II) இற்கு அமைய பயிற்சியளித்தல் தரம் ஐ ஆம் ஆண்டுக்கு ரூபா 12,920 - தரம் II ஆம் ஆண்டுக்கு ரூபா 13,040.

6/2006 ஐஏ ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பில் “ஆ” பிரிவுக்கு II ஆம் வகுப்பின் “அ” பிரிவுக்கு தரம் ஐ இற்கு எம்என் 3-2006-ஏ சம்பளத் திட்டம் உரியதாகும்.

ரூ. 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 ரூ. 27,885 (மாதாந்தம்).

**குறிப்பு.-** பயிற்சியளிக்கும் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு ஆண்டுகள் பயிற்சி நிறைவுற்ற பின்னர் தோற்றவேண்டிய தகைமைப் பரீட்சையில் சித்திபெற்றால் II ஆம் வகுப்பில் “ஆ” பிரிவுக்கு நியமிக்கப்படுவார்கள்.

**18.** சேவை உடன்படிக்கை :

**18.1** இந்தப் பதவி நிரந்தரமானதும். ஓய்வூதிய உரித்து உடையதாகும்.

2 ஆண்டு பயிற்சிக்காலம் முடிவுற்ற பின்னர் 3 ஆண்டு தகுதி காண் காலத்திற்கு உட்படும் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் அவர்கள் விதவைகள், அனாதைகள்/ தாரமிழந்தவர் அனாதைகள் ஓய்வூதிய சம்பளத் திட்டத்துக்கு பங்களிப்பு நிதி வழங்க வேண்டும்.

**18.2** தெரிவுசெய்யப்படுபவர்கள் இலங்கை தொழில்நுட்ப சேவை யாப்பு, நிறுவனக் கோவை, நிதிச்சட்ட ஒழுங்குவிதிகள், திணைக்கள பணிப்புரை ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தால் தற்போது வெளியிடப்பட்டுள்ள மற்றும் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் வேறு பணிப்புரைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

**18.3** அரச கரும மொழி அல்லாத வேறு மொழி ஊடாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர்கள் நியமனம் பெற்ற திகதியில் இருந்து மூன்று (03) ஆண்டு காலத்துக்குள் அரச கரும மொழிப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் இந்தப் பரீட்சையில் சித்தி பெறாதவர்கள் அடுத்து வரும் சம்பள உயர்ச்சியைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் ஆவர்.

**18.4** நிரந்தர நியமனம் பெற்ற திகதியில் இருந்து 5 ஆண்டு காலத்துக்குள் 7/ 2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி தனது பதவிக்கு உரிய மட்டத்தில் இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும். குறிப்பி[illegible] காலத்துக்குள் அத்தகைய தேர்ச்சிபெற முடியாதுவிட்டால், அத்தகைய தேர்ச்சி பெறும்வ[illegible] சம்பள உயர்ச்சி நிறுத்தி வைக்கப்படும்.

**18.5** 1589/ 30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள பொதுச்சே[illegible] ஆணையத்தின் பதவியணியினர் சேவைப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைவானது.

**18.6 முக்கியமானது :**

(i) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கடமையைப் பொறுப் பேற்பதற்கு முன்னர் 7 ஆண்டு குறைந்தபட்ச சேவைக் காலத்திற்கு திணைக்களத்தில் சேவை புரிவதாகவும் அவர் அந்த காலப்பகுதியில் திணைக்களத்தில் சேவை புரிவதற்கு இயலாமல் போனால் 2,50,000 ரூபா பெறுமதியான பணத்தையும் அதுவரைக்கும் அவ்வூழியருக்கு அரசினால் செலுத்தப்பட்ட சம்பளம், கொடுப்பனவு உட்பட சகல செலவுகளையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு செலுத்துவதாகவும் திணைக்களத் தலைவர் ஊடாக ஏற்றுக்கொள்ளத்தக்க பிணையாளர்கள் இரண்டு பேருடன் உடன்படிக்கை செய்து கையெழுத்திட வேண்டும்.

(ii) கடமை நேரம் அனைவருக்கும் பொதுவான அலுவலக நேரம் அல்ல என்பதுடன் இரவு பகல் இரண்டு வேளையும் மற்றும் சனி, ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் கடமைக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். கடமைப் புத்தகத்துக்கு ஏற்ப கடமை புரிதல் வேண்டும்.

(iii) அவர்கள் தீவின் எந்தப் பிரதேசத்திலும் கடமை புரிய வேண்டும்.

எஸ். எச். காரியவசம், பணிப்பாளர் நாயகம், வளிமண்டலவியல் திணைக்களம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, 2012.08.17.

பரீட்சை நிலையங்களின் பெயரும் இலக்கமும்:

கொழும்பு- 01, கண்டி- 02, காலி- 03, குருநாகல்- 04, அனுராதபுரம்- 05, இரத்தினபுரி- 06, பதுளை- 07, யாழ்ப்பாணம்- 08, வவுனியா- 09, மட்டக்களப்பு- 10.

### மாதிரி விண்ணப்பப்படிவம் வளிமண்டலவியல் திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் பயிற்சித் தரத்திற்கு வளிமண்டலவியல் அவதானிப்பாளர் /தொடர்பாளர்கள் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012**

**Competitive Examination for Recruitment of Meteorological Observers/ Communicators to the Training Grade of the Sri Lanka Technological Service - 2012**

* பரீட்சைக்கு தோற்றும் மொழி :-..........................................

சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 (கூட்டில் உரிய இலக்கத்தை இடவும்)

* பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் பரீட்சை மையமும் அதன் இலக்கமும்:....................

பரீட்சை மையத்தின் மையம் இலக்கம் (வர்த்தமானி அறிவித்தலில் உப பிரிவு இல. 1 இற்குஅமைய பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரத்தையும்விருப்பு வரிசையில் குறிப்பிடவும்).

1. **(அ)** முதலெழுத்து இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்):-

..........................................................................................

உதாரணம் :- (SILVA, A. B. C.)

**(ஆ)** முதலெழுத்து இறுதியில் வருமாறு பெயர் (சிங்களத்தில் / தமிழில் ) :

குதி I : தொகுதி (IIm) - இலங்கைச்சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப்பத்திரிகை- 2012.09.07 3

**(இ)** முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில் / தமிழில் ) :-

..........................................................................................

**(ஈ)** முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்துக்களால் நிரப்ப வேண்டும்):


..........................................................................................

(7 ஆம் பக்கம் பார்க்க)

▶ கிழக்கு ▶ வடமத்திய ▶ சப்ரகமுவ

# மாகாண சபைத் தேர்தல் முடிவுகள்






## கிழக்கு மாகாணம்

| கட்சி | பெற்ற வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ● ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 200,044 | 14 |
| ● இலங்கை தமிழரசுக் கட்சி | 193,827 | 11 |
| ● ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 132,917 | 07 |
| ● ஐக்கிய தேசியக் கட்சி | 74,901 | 04 |
| ● தேசிய சுதந்திர முன்னணி | 9,522 | 01 |
| ● மக்கள் விடுதலை முன்னணி | 3,154 | - |

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 678,825 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 633,534 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 45,291 |
| வாக்காளர் தொகை | - | 1,033,749 |

## மட்டக்களப்பு மாவட்டம்

| கட்சி | பெற்ற வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ● இல.த.க. | 104,682 | 06 |
| ● ஐ.ம.சு.மு. | 64,190 | 04 |
| ● ஸ்ரீல.மு.கா. | 23,083 | 01 |
| ● சுயேட்சை குழு - 08 | 5,712 | - |
| ● ஐ.தே.க. | 2,434 | - |
| ● சுயேட்சை குழு - 21 | 1,905 | - |

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 223,159 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 205,936 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 17,223 |
| வாக்காளர் தொகை | - | 347,099 |

## அம்பாறை மாவட்டம்

| கட்சி | பெற்ற வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ● ஐ.ம.சு.மு | 92,530 | 05 |
| ● ஸ்ரீல.மு.கா | 83,658 | 04 |
| ● ஐ.தே.க. | 48,028 | 03 |
| ● இல.த.க. | 44,749 | 02 |
| ● ம.வி.மு. | 2,305 | - |
| ● சோ.ம.மு. | 1,489 | - |

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 291,679 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 274,935 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 16,744 |
| வாக்காளர் தொகை | - | 441,287 |

## திருகோணமலை மாவட்டம்

| கட்சி | பெற்ற வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ● இல.த.க. | 44,396 | 03 |
| ● ஐ.ம.சு.மு | 43,324 | 03 |
| ● ஸ்ரீல.மு.கா | 26,176 | 02 |
| ● ஐ.தே.க. | 24,439 | 01 |
| ● தே.சு.மு. | 9,522 | 01 |
| ● சுயேட்சை குழு - 10 | 1,642 | - |

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 643,987 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 152,663 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 11,324 |
| வாக்காளர் தொகை | - | 245,363 |

## வடமத்திய மாகாணம்

| கட்சி | பெற்ற வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ● ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 338,552 | 21 |
| ● ஐக்கிய தேசியக் கட்சி | 196,127 | 11 |
| ● மக்கள் விடுதலை முன்னணி | 16,066 | 01 |
| ● எக்ஸத் லங்கா பொதுஜனக் கட்சி | 226 | - |
| ● ஜனசெத பெரமுண | 220 | - |
| ● ஐக்கிய சோசலிசக் கட்சி | 196 | - |

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 580,938 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 552,928 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 28,010 |
| வாக்காளர் தொகை | - | 900,873 |

## பொலன்னறுவை மாவட்டம்

| கட்சி | பெற்ற வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ● ஐ.ம.சு.மு. | 104,165 | 06 |
| ● ஐ.தே.க. | 69,943 | 04 |
| ● ம.வி.மு. | 4,383 | - |
| ● ஐ.சோ.க. | 196 | - |
| ● எக்.லங்.மகா சபா | 91 | - |
| ● சுயேட்சை குழு - 07 | 62 | - |

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 188,938 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 179,146 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 9,792 |
| வாக்காளர் தொகை | - | 294,365 |

## அநுராதபுரம் மாவட்டம்

| கட்சி | பெற்ற வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ● ஐ.ம.சு.மு. | 234,387 | 13 |
| ● ஐ.தே.க. | 126,184 | 07 |
| ● ம.வி.மு. | 11,684 | 01 |
| ● சுயேட்சை குழு - 05 | 632 | - |
| ● எக்.லங்.மகா சபா | 226 | - |
| ● ஜனசெத் பெரமுண | 178 | - |

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 392,000 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 373,782 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 18,218 |
| வாக்காளர் தொகை | - | 606,508 |

## சப்ரகமுவ மாகாணம்

| கட்சி | பெற்ற வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ● ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 488,714 | 28 |
| ● ஐக்கிய தேசியக் கட்சி | 286,857 | 14 |
| ● இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | 25,985 | 02 |
| ● மக்கள் விடுதலை முன்னணி | 12,164 | - |
| ● எக்ஸத் லங்கா மகா சபா | 331 | - |
| ● நவசம சமாஜக் கட்சி | 286 | - |

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 878,976 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 825,850 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 53,126 |
| வாக்காளர் தொகை | - | 1,401,795 |

## இரத்தினபுரி மாவட்டம்

| கட்சி | பெற்ற வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ● ஐ.ம.சு.மு. | 274,980 | 15 |
| ● ஐ.தே.க. | 156,440 | 08 |
| ● இ.தொ.கா. | 17,014 | 01 |
| ● ம.வி.மு. | 7,645 | - |
| ● சுயேட்சை குழு - 06 | 348 | - |
| ● எக்.லங்.பொதுஜன கட்சி | 279 | - |

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 397,062 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 367,997 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 29,065 |
| வாக்காளர் தொகை | - | 631,981 |

## கேகாலை மாவட்டம்

| கட்சி | பெற்ற வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ● ஐ.ம.சு.மு. | 213,734 | 11 |
| ● ஐ.தே.க. | 130,417 | 06 |
| ● இ.தொ.கா. | 8,971 | 01 |
| ● சுயேட்சை குழு - 02 | 6,510 | - |
| ● ம.வி.மு. | 4,519 | - |
| ● சுயேட்சை குழு - 09 | 1,669 | - |

| | | |
|---|---|---|
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - | 397,062 |
| செல்லுபடியான வாக்குகள் | - | 367,997 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | - | 29,065 |
| வாக்காளர் தொகை | - | 631,981 |

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி திங்கட்கிழமை

## யாழ்ப்பாணத்தில் சிங்களத் தாதி மீதான தாக்குதல் திட்டமிடப்பட்ட ஒன்றா?

யாழ் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் குருநாகலையைச் சேர்ந்த சிங்களத் தாதியொருவர் இனந்தெரியாத நபரொருவரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். ஆனைப்பந்தியிலுள்ள யாழ் வைத்தியசாலை தாதியர் விடுதிக்குள் நள்ளிரவு வேளையில் புகுந்த நபரொருவரே குறித்த தாதியை வெட்டிக் காயப்படுத்திவிட்டுச் தப்பிச் சென்றுள்ளார். யாழ் போதனா வைத்தியசாலையில் சுமார் 500 தாதியர்கள் பணி புரிகிறார்கள். இவர்களுள் நாட்டின் வேறு பகுதிகளைச் சேர்ந்த கணிசமான சிங்களத் தாதிகளும் பணிபுரிகிறார்கள். சுமார் இருபது சிங்களத் தாதிகள், ஆனைப்பந்தி விடுதியில் தங்கியிருந்தனர். அவர்களில் ஒருவரே இலக்கு வைத்துத் தாக்கப்பட்டுள்ளதால், ஏனைய சிங்களத் தாதிமார் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர்.

இந்த நாட்டில் நிலவிய இனமுறுகல் நிலையும், யுத்தமும் தமிழ்ப் பகுதிகள் சிங்கள மக்களுக்குத் தடை செய்யப்பட்ட பிரதேசம் போன்றே விளங்கியது. தமிழ்ப் பகுதிகளுக்குள் சிங்கள மக்களும், பெரும்பாலான சிங்களப் பகுதிகளுக்கு தமிழ் மக்களும் செல்லத் தயங்கிய காலம் ஒன்றிருந்தது. தமிழர்களைச் சிங்களவர்களும், சிங்களவர்களைத் தமிழர்களும் சந்தேகக் கண்ணோடு பார்த்த யுத்த காலப் பகுதியது. யுத்தத்தில் ஈடுபட்ட சகல தரப்பினருமே ஏட்டிக்குப் போட்டியாக மாற்றினத்தவரை பலியெடுத்த காலமே அது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இந்த நாட்டில் மீண்டும் இன சௌஜன்யம் கட்டியெழுப்பப்படுமென்றுதான் சகல இன மக்களும் எதிர்பார்த்தார்கள்.

யுத்தம் முடிந்தாலும் சிங்கள மேலாதிக்க சிந்தனையுள்ளவர்களும், அதேபோன்று தமிழ் மேலாதிக்க சிந்தனையுள்ளவர்களும் இன்னமும் இந்த நாட்டில் இருக்கவே செய்கிறார்கள். இன மோதல் ஒன்றினை ஏற்படுத்தி அதில் குளிர் காய்வதற்கு இரு தரப்பு மேலாதிக்க சக்திகளும் காத்துக் கிடக்கின்றன. சிங்கள, தமிழ் கடும் போக்கு அதிதீவிரவாத சக்திகள் அவ்வவ்போது போடும் காட்டுக் கூச்சல்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

அப்பாவி தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரையில் இனியொரு யுத்தத்திற்கு ஈடுகொடுக்கக் கூடிய நிலையில் அவர்கள் இல்லை. நாடு கடந்த தமிழீழ அரசாங்கமென்று நாட்டுக்கு வெளியே இருந்து சிலர் ஊளையிடுகிறார்கள். அதேபோன்று இந்த நாடு சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டுமே சொந்தமானதென்று இன்னும் சிலர் ஊளையிடுகிறார்கள். தமிழ் மக்களை வந்தேறு குடிகள் என்றும் இவர்கள் வகைப்படுத்துகிறார்கள்.இந்த நாட்டிலுள்ள அனைத்து இன மக்களுமே வந்தேறு குடிகள்தான் என்பது இந்த பிரகிருதிகளுக்கு தெரியாத ஒன்றல்ல.

யாழ் போதனா வைத்தியசாலைத் தாதியர் விடுதியில் சிங்களப் பெண்மணி தாக்கப்பட்டமைக்குப் பின்னால் படுபயங்கரமான சதி-யொன்றிருக்கலாம். தமிழகத்தில் சிங்கள கத்தோலிக்க யாத்திரீகர்களும் இலங்கை கால் பந்தாட்ட அணியொன்றும் விரட்டியடிக்கப்பட்ட பின்புலத்தில்தான் சிங்களத் தாதி மீதான இந்தத் தாக்குதல் நடைபெற்றது. இதனை வெறுமனே ஒரு எதேச்சையான சம்பவமாகப் பார்க்கக்கூடாது. வகுப்புவாதம் என்றுமே ஒன்றிலொன்று தங்கி நின்று வளர்ச்சி பெறுவது வழக்கம். "தமிழன் சிங்களவனைக் கலைத்தான், சிங்களவன் தமிழனைக் கலைத்தான்" என்ற ஒரு சூத்திரத்தின் இரு பக்கங்கள் இவை.

சிங்களத் தாதி தாக்கப்பட்டதால், யாழ் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் ஏனைய சிங்கள ஊழியர்களும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறவே விரும்புவார்கள். இது அவர்களின் பாதுகாப்போடும், வாழ்வோடும் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இவ்வாறான இன ரீதியான சம்பவங்கள்தான் இந்த நாட்டையே எரிசரமாக்கியது என்பதை ஆட்சியில் இருப்போர் உணர்ந்து கொள்ள வேண்டும். மற்றொரு பிரச்சினைக்கான முதல் வேட்டாகக் கூட இந்தச் சம்பவம் இருக்கலாம். இவை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட வேண்டும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படத் தவறினால், ஆபத்து அண்மித்துவிடும். இனவாதத்தையும், இனக் குரோதத்தையும் கிளப்புவதற்கான சர்வதேச வலைப் பின்னலொன்று ஏற்கனவே உருவாகி களத்துக்கு வந்து நிற்கிறது. மேற்கு நாடுகளிலும், இந்தியாவிலும் இடம்பெறும் சம்பவங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

எனவே நாட்டை மீண்டும் எரிநெருப்புக்குள் தள்ளிவிட எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட வேண்டும். இதற்கான முழுப்பொறுப்பும் அரசாங்கத்தின் மீது மட்டுமல்ல, சிவில் சமூகத்திற்கும் உண்டு.

யாழ் வைத்தியசாலையில் சிங்களத் தாதி மீது தாக்குதல் நடத்தியவர்களின் எதிர்பார்ப்பு ஈடேறுமானால், ஏனைய இடங்களுக்கும் இது விரிவாக்கப்படக் கூடிய ஆபத்து இருக்கிறது. எனவே பிரச்சினையின் பாரதூரத் தன்மையைக் கவனத்தில் கொண்டு இந்த ஆபத்தான சூழ்நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு உரியவர்கள் ஆவன செய்ய வேண்டும். கடந்துபோன பஸ்சுக்கு கை காட்டுவதில் பயனில்லை என்று தமிழில் ஒரு பேச்சு வழக்குண்டு. வரும் முன் காப்போம் என்றும் சொல்வார்கள். இவையும் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கே தரப்படுகின்றன. இதேநேரம், வைத்தியசாலை ஊழியர்கள் உடனடியாகவே சம்பவத்தைக் கண்டித்து போர்க்கொடி தூக்கியிருப்பது பாராட்டப்பட வேண்டிய முன்னுதாரணமாகும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# ✔ இன்றைய புலம்பெயர்தலும்
# ✔ சங்க இலக்கியத்தில் புலம்பெயர்தலும்

அன்று தொட்டு இன்று வரை புலம் பெயர்தல் என்பது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. புலம் என்பதற்கு இடம் எனப் பொருள் கொண்டு இடம் பெயர்தல் என்று இதனைக் குறிப்பிடலாம். இடம் பெயர்தல் என்பது மனிதன் தோன்றிய காலத்திலிருந்து நடந்து வரக்கூடிய ஒன்றாகும்.

மேலோட்டமாகப் பார்த்தால் நம் இனத்துக்கும் மற்ற இனத்தாருக்கும் அப்படியென்ன இடைவெளி இருந்து விடப்போகிறது என்று எண்ணத் தோன்றும். நிறைய இருக்கிறது!!. தலையை ஆட்டுவதில், ஒன்றை வெளிப்படுத்துவதில், பதில் சொல்வதில், எண்ணத்தில், செயலில், பண்பாட்டில் என்று பலப்பல இடைவெளிகள் இருக்கின்றன. ஒரே இனத்தைப் பார்ப்பவருக்கு அல்லது அந்த இனத்துக்குள்ளேயே இருப்பவருக்கு அந்த இடைவெளிகள் தெரியாது. பல இனத்தாரோடும் பழகுகிறவர்களுக்கு அது தெளிவாகத் தெரியும். "இந்த இனத்தான் இப்படிப்பட்டவன்" என்று எளிதில் மதிப்பிட்டு விடுகிறார்கள்.

புலம் பெயர்ந்து வாழ்தலில் பல நன்மைகள் இருக்கின்றன. அது அவனுக்கு மட்டுமல்லாமல் அவன் சார்ந்த அவன் சமுதாயத்திற்கே ஏற்படுகிற நல்ல முன்னேற்றமாக அமைந்து விடுகிறது. நாடு விட்டு நாடு போவது மட்டும் புலம் பெயர்தல் ஆகி விடாது. இடம் விட்டு இடம் பெயர்தலும் புலம் பெயர்தலே என்று குறிப்பிடலாம். எப்படி நல்ல விசயங்கள் பரவுகின்றனவோ அது போலப் பல நல்லன அல்லாதவையும் பரவும் வாய்ப்பும் இருக்கிறது.

"நம்மைப்பற்றி மதிப்பீடு செய்கிறார்கள், நாம் பல இன சமுதாயத்தில் வாழ்கிறோம்" என்கிற பிரக்ஞையோடு நாம் கவனமாகச் செயலாற்ற வேண்டும். ஒவ்வொருவரும் அப்படி நடந்து கொண்டால் நம் இனத்தின் ஒட்டு மொத்த மதிப்பு உயரும். எல்லோரும் ஒன்றாய்க் கலந்து கொள்ளும் நிகழ்வுகள் நிறைய நடக்க வேண்டும். மனிதன் அவன் வட்டத்துக்குள்ளேயே இருந்து விடுவானாயின் அங்கே இடைவெளிகள் இருக்காது. முன்னேற்றமும் இருக்காது. புலம் பெயர்ந்து வாழ்கிறவர்கள் இது பற்றி யோசிக்க வேண்டும். தங்கள் வட்டங்களை விட்டு வெளியே வர வேண்டும். அடுத்த இனத்தோடு அணுக்கமாகப் பழக வேண்டும். அவர்கள் எப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். நமக்கும் அவர்களுக்கும் என்ன இடைவெளிகள் இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நடுநிலையோடு ஆராய்ந்து அடிமனதில் பதிந்து போய் இருக்கிற நம்பிக்கைகளை வேரோடு பிடுங்கி எறிந்து விட்டுப் புதிய நம்பிக்கை நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். புது நாத்து வளரும். அந்த அறுவடை நாள் சிறப்பான நாளாக இருக்கும்.

பல இனங்கள் சேர்ந்து வாழும் பல இன சமுதாயத்தில் ஒருவரிடம் ஒருவர் பழகிக் கொள்கிறார்கள், பழக்கவழக்கங்களும் பரஸ்பரம் சென்று சேர்கின்றன. அங்கே கற்றலும், கற்றுக் கொடுத்தலும் சாத்தியமாவதால் நாளடைவில் மாற்றம் நிகழ்கிறது. இடம் விட்டு இடம் பெயர்தலால் மனிதன் மேலும் மேலும் மெருகேறுகிறான்.

மனிதன் தனது தொடக்கக் காலத்தில் இருந்தே கூட்டம் கூட்டமாகப் புலம் பெயர்ந்து




வாழ்தலைக் கடைப்பிடித்து வந்தான். பறவைகள், விலங்குகள் போன்றவை உணவிற்காகவும், நீருக்காகவும், வாழ-டங்களுக்காகவும், இனப்பெருக்கத்திற்காகவும் இயற்கையாக இடம் பெயர்தல் உண்டு. இயற்கையே இதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது எனலாம்.

புலம்பெயரக் கூடியவை பெரும்பாலும் மீண்டும் தங்களது பூர்வீக இருப்பிடத்திற்குத் திரும்புவதுண்டு. இல்லையெனில் புதிதாகத் தாங்கள் வந்த இடத்திலேயே தங்கி விடுவதும் உண்டு. சில விலங்குகள் மற்றும் பறவையினங்கள் ஒவ்வொரு இடமாகப் புலம் பெயர்ந்து கொண்டு செல்வதுமுண்டு.

### தொல்காப்பியம்-சங்க இலக்கியம் இவற்றில் புலம்பெயர்தல்

சங்க காலத்திலும் இப்புலம் பெயர்தல் என்பது அதிகமாக நிகழ்ந்திருப்பதற்குச் சான்றுகள் உள்ளன. தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள,

""திணை மயக்குறுதலும்
கடிநிலை இலவே"

என்ற நூற்பாவிற்கு உரை எழுதும் உரையாசிரியர்கள் ஒரு நிலத்திலுள்ளவை மற்றொரு நிலத்திற்கு வந்து திரியினும் அதனை நீக்க மாட்டார்கள்" என்று உரை எழுதுகின்றனர். இங்கு திரிதல் என்பதற்கு உலவி வருதல் என்று பொருள் கொள்ளலாம். வழக்கத்தில் ஒருவன் வீட்டில் தங்காது வெளியிடங்களுக்குச் சென்று வந்தால் அவனைப் பார்த்து வீட்டில் உள்ள பெரியோர்கள், ""எங்கே போய் திரிந்து விட்டு வருகின்றாய்?" என்று கேட்பர். இங்கு திரிதல் இடம் விட்டு இடம் சென்று வருதல் என்ற பொருளைக் குறிக்கின்றது. திணை மயக்கம் என்பது, மலையில் வசிக்கும் (குறிஞ்சி) பறவைகளோ, விலங்குகளோ, காடு, வயல் சார்ந்த இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்று உறைந்து (தங்கி) வருவதனைக் குறிக்கும். இதனைப் புலம்பெயர்தல் என்று கூறலாம்.

நிலம் என்பதை இடம் எனக் கொண்டால் மலை (குறிஞ்சி), காடு (முல்லை), வயல் (மருதம்), கடல் (நெய்தல்), மணல் சார்ந்த இடம் (பாலை) என ஐந்நிலமும் ஐந்து வகையான நிலப் பகுதிகளைக் (இடங்களாக) குறிக்கும் எனலாம். முல்லை நில மக்கள் பால், தயிர், வெண்ணெய் உள்ளிட்ட பாற்பொருள்களை மருத நிலத்திற்கு எடுத்துச் சென்று விற்று வந்தனர்.

கடற்புரத்தில் வசித்த பரதவர், உமணர் போன்றோர் மீன், உப்பு ஆகியவற்றை மருத நிலத்திற்குக் கொண்டு சென்று உப்பையும், மீனையும் கொடுத்து விட்டு நெல்லையும், பிற உணவுப் பொருள்களையும் பெற்று வந்தனர். எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பட்டினப்பாலை இத்தகு செய்திகளை விரிவாக எடுத்துரைக் கின்றது. இவை பெரும்பாலும் வணிகத்திற்காகப் புலம் பெயர்தலைக் குறிக்கின்றது. இங்ஙனம் வணிகத்திற்காகப் புலம் பெயர்தல் என்பது தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நிகழ்வதுண்டு.

### புலம்பெயர்தல் வகைகளும் அதற்கான காரணங்களும்

புலம்பெயர்தலை தற்காலி-மாகப் புலம் பெயர்தல், நிரந்தரமாக இடம் பெயர்தல் என்று இரு வகையாகப் பகுக்கலாம். தற்காலிகமாக இடம் பெயர்தல் என்பது தாங்கள் கொண்டு சென்ற பொருள்களை ஓரிரு நாள்களில் விற்று விட்டு மீண்டும் தங்களிருப்பிடத்திற்கு வந்து விடுதலைக் குறிக்கும். சிலர் வணிகத்தின் பொருட்டுத் தங்களிருப்பிடத்தை விட்டு நெடுந்தொலைவு சென்று அங்கேயே தங்கி விடுவதும் உண்டு. இத்தகைய புலம்பெயர்தலைப் "பிரிவு" பற்றிக் குறிப்பிடும் போது தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

"ஓதல் பகையே தூதிவை
பிரிவே"

என கல்விக்காகவும், பகைப் புலம் நோக்கிப் படையெடுக்கும் காரணமாகவும், பொருள் காரணமாகவும், தூதுவராகச் செல்வதற்காகவும் (பணி காரணமாக இடம்பெயர்தல்) புலம் பெயர்தல் உண்டு. இத்தகைய புலப்பெயர்வுகள் தற்காலிகமானவையாகும். அவ்வாறு புலம் பெயர்ந்து சென்றோர் தாங்கள் மேற்கொண்ட பணி முற்றுப் பெற்றவுடன் மீளத் தம்முடைய இருப்பிடத்திற்குத் திரும்பி வந்து விடுவர். போர் காரணமாகப் புலம் பெயர்ந்து சென்று மீண்டதை முல்லைப் பாட்டு, நெடுநல்வாடை போன்றவை குறிப்பிடுகின்றன. சங்க காலத்தில் தமிழகம் சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பிரிக்கப்பட்டு மூவேந்தர்களால் ஆளப்பட்டு வந்தது.

(7ஆம் பக்கம் பார்க்க)

# அன்னமே அறியாயோ? இதுதான் உண்மையென்று



ஆன்றோரும், சான்றோரும் "அன்னப் பறவையை" வைத்து பாடல்களையும், எடுத்துக்காட்டுக்களையும் அவ்வப்போது எடுத்தாண்டுள்ளார்கள் இன்றும் அது சார்ந்து எடுத்தாளப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. பாலுடன், நீரைக்கலந்து வைக்கின்றபோது அன்னமானது நீரைவிடுத்து, பாலைப் பிரித்துக் குடிக்கின்றது. இது ஒருபுறம் இடம்பிடித்து இருக்க, மறுபுறம் நல்லவர்கள் எப்போதும் நல்லதையே தெரிந்து கொள்வார்கள் என்ற மரபுச் சொற்பதங்களும் மறுக்க முடியாதவையாகவும், மழுப்பமுடியாதவையாகவும் அச்சிலும் சரி பேச்சிலும் சரி உலா வருகின்றன. ஆனால் உண்மையாகவே அன்னத்திடம் பாலையும் நீரையும் பிரித்துக் குடிக்கக் கூடிய சக்தி இருக்குதா என்றால் நன்னூலிலும், நளவெண்பாவிலும் இடம்பெற்ற பாடல்கள் பொருள் அற்றதாய் எழுந்துவிடும். உண்மையாகவும் அந்தச் சக்தி அன்னத்திடம் இல்லை. "அன்னம் ஆவே மண்ணொடு கிளியே இல்லிக்குடம் ஆடு எருமை, நெய்அரி" என்ற நன்னூல் பாடலின் பொருளை நோக்கும் போது இங்கு முதல், இடை, கடை என மூன்று நிலையான மாணவர்களைச் சுட்டிக்காட்டியுள்ளது. பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தாலும் அன்னம் நீரை விட்டுவிட்டு பாலையே அருந்தும், ஆ என்றால் பசு, பசுவானது பகலில் மேய்ந்துபோட்டு இரவில் அசைபோடுகின்றது, இரை மீட்கின்றது. கிளி சொன்னதைச் செய்யும். இல்லிக்குடம் என்பது ஓட்டைக்குடம், ஓட்டைக்குடத்தில் எப்படித்தான் நீரை ஊற்றினாலும் தண்ணீர் தேங்கி நிற்காது, ஆடு என்பது நல்ல புற்தரையில் மேயக்கட்டினாலும் அது நுனிப்புல் மேய்வாகவே மேயும். இதற்குப் பிறகு கைக்குழை, அல்லது கைச்சாப்பாடு கொடுத்த பின்புதான் இதன் பசியடங்கும் எருமை என்பது சுத்தமான நீர் உள்ள குட்டையைக் கலக்கி சேறாக்கி விடுவதோடு, அச்சேறை தனது உடலிலே பூசி தன்னையும் சேறாக்கிக் கொள்ளும். நெய் அரி என்பது பன்னாடையைக் குறிக்கும். பன்னாடை (வடி) நல்லவற்றைக் கீழே வடித்துக்கொடுத்து (இலை, பூச்சி, வண்டு, எறும்பு) கஞ்சல் குப்பைகளை மேலே தேக்கி வைத்திருக்கும். இவ்வாறு அன்னம் முதல் நெய் அரி வரை மாணாக்கர் பாகுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள் அன்னப் பறவையின் அதிசயத்தை நம்பி. முன்னையோர்களும், இன்றையோர்களும் முந்தியடித்துக் கொண்டு பிழையைக் கூட சரியென்று பல சமயங்களில் தொகுத்தளித்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். இதனால் பிழையான தகவல்களை சரியான முறையில் சரியாக நிறுவிக் கொண்டாலும் அதனைப் பிழையென்று கூறும் சமூகம் இல்லாமல் இல்லை. ஒரு மாணவனையோ அல்லது ஒரு விடயத்தில் தவறுவிடுகின்ற ஒருவரையோ பார்த்து சம்பந்தப்பட்ட ஆசிரியரோ, அதிகாரியோ, பெற்றோர்களோ மேலேகுறிப்பிட்ட அன்னப் பாடலை உதாரணமாகக் காட்சி பேசுவது வழமை. அன்னத்திடம் பாலையும், தண்ணீரையும் வைத்தால் அது பிரித்தெடுத்து பாலைத்தான் குடிக்கும், தண்ணீரைக் குடிக்காது அது மாதிரித்தான் நீங்களும் நல்லதை எடுத்துக் கொண்டு தீயதை கைவிடவேண்டும் என்று மேடைப் பேச்சுக்களிலும் ஏனைய நிகழ்வுகளிலும் "அரைத்த மாவை அரைப்போமா? துவைத்த துணியைத் துவைப்போமா? என்பதற்கிணங்க மேலேயுள்ள பதத்தை எடுத்தாளுவது வெறுமனே பிழையானது. "பாடையேறினும் வடது கைவிடேன்" "அடியைப் போல் அண்ணன் தம்பி உதவாது" சோமியன் குடுமி சும்மா ஆடாது" "மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கக்கூடாது" போன்ற பிழையான பழமொழிகள் இருந்தாலும் இவற்றை யாரும் கண்டு கொள்வதில்லை. ஊர்களின் காரணப் பெயர்கள் சில எப்படி காலப்போக்கில் திரிவுபட்டு வந்தனவோ அதுபோலவேதான் அன்னத்தின் நிலையும் உருப்பெற்றது. வெல் என்று பதம் எப்படி வேல் ஆகவும், சமையம் என்ற பதம் எப்படி சமயம் என்று உருப்பெற்றதோ அவ்வாறுதான் அன்னமும் கீழ்கண்டவாறு உருப்பெற்றது. அன்னத்திடம் பாலை வைத்தால் அது நீரைத் தனியே பிரித்துவிட்டுப் பாலை மட்டும் அருந்தும் என்ற ஒரு தவறான கருத்து நிலவுகின்றது. உண்மை இதுதான் தாமரைத் தண்டில் பால்போன்ற ஒரு திரவம் இருக்கும். தண்ணீரில் இருந்தபடியே தாமரைத் தண்டை ஒடித்து இத்திரவத்தை அன்னம் அருந்தும், தண்ணீரிலிருந்து கொண்டே இந்தப் பாலைப் பருகுவதால் அப்படிச் சொல்லத் தொடங்கி

ஜெயம் ஜெகன்

விட்டார்கள் அன்னமே அறியாயோ? இதுதான் உண்மையென்று

## இன்றைய...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாண்டிய நாட்டுப் புலவர் பிசிராந்தையார் நட்பின் காரணமாகத் தூண்டப்பட்டுப் புலம் பெயர்ந்து, சோழநாடு வந்து தனது நண்பன் கோப்பெருஞ்சோழன் இறந்த இடத்திலேயே இறந்தார். இஃது நிரந்தரப் புலம் பெயர்தலை சார்ந்ததாகும். குறிஞ்சி நிலமாகிய மலை நாட்டில் நண்பர் பாரியுடன் வசித்து வந்த கபிலர் தனது நண்பர் மூவேந்தர்களது சூழ்ச்சியி னால் கொல்லப்பட்ட வுடன் பரம்பு மலையை விட்டுப் புலம் பெயர்ந்தார்.

பாரியின் மகள்களை மணமுடித்துக் கொடுத்துவிட்டு மீண்டும் பரம்பு மலைக்கு வந்து அங்கு வடக்கிருந்து உயிர் துறந்தார். தனது நண்பன் தன்னிடம் கொடுத்த கடமையை நிறைவேற்றி விட்டு மீண்டும் பரம்பு மலைக்கு வந்து அங்கு வடக்கிருந்து உயிர் துறந்ததைப் புறநானூறு தெளிவுறுத்துகின்றது. கபிலர் புலம் பெயர்ந்தது தற்காலிகப் புலம் பெயர்தலைச் சேர்ந்ததாகும்.இங்ஙனம் புறநானூறு பல்வேறு வகையாக இப்புலம்பெயர்தலை எடுத்துரைக்கின்றது.

ஆற்றுப்படை நூல்கள் அனைத்தும் புலம் பெயர் மக்களைப் பற்றியதாக அமைந்திலங்குகின்றது. இவை ஒரு நிலத்தில் உள்ளோர் தங்களுக்கு அருகில் உள்ள நிலத்திற்குச் சென்று வாழ்ந்ததைக் குறிப்பிடுகின்றது.

"புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்"

என்று வெளிநாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வந்து புகாரில் வாழ்ந்தவர்களைப் பற்றி பட்டினப்பாலை எடுத்துரைக்கின்றது.

"பதியெழு அறியாப் பழங்குடி கெழீஇய" (சிலம்பு) எனப் புலம் பெயராது ஒரே இடத்தில் மக்கள் வாழ்ந்த செய்தியையும் செவ்வியல் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## திறந்த போட்டிப் பரீட்சை...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2. தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :- ..........................

3. பால் :- ..........................

(ஆண் - 0, பெண்-1) (கூட்டில் உரிய இலக்கத்தை இடவும்)

4.நிரந்தர முகவரி : ..........................

(அ) (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................

(ஆ)ஆங்கிலத்தில் : ..........................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களால் நிரப்ப வேண்டும்). (இந்த முகவரிக்கே அனுமதி அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.)

(இ) நிரந்தரமாக வதியும் மாவட்டம் : ..........................

(ஈ) பிரதேச செயலாளர் பிரிவு : ..........................

(உ) தங்களின் தொலைபேசி இலக்கம் : ..........................

5.(அ) பிறந்த திகதி :- ..........................

ஆண்டு : .................. மாதம் : .................. திகதி : ..................

(ஆ) 2012.10.05 ஆந் திகதியன்று வயது : ..........................

வருடங்கள் : .................. மாதங்கள் : .................. நாட்கள் : ..................

6. திருமணமானவர்/ திருமணமாகாதவர் : ..........................

(திருமணமானவர் - 1, திருமணமாகாதவர் - 2) (கூட்டில் உரிய இலக்கத்தை இடவும்).

7. இனம் : ..........................

சிங்களவர் - 1, தமிழர் - 2, வேறு - 3 (கூட்டில் உரிய இலக்கத்தை இடவும்).

8. கல்வித் தகைமை :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை : ..........................

முதல் தடவை இரண்டாம் தடவை

ஆண்டு : .................. ஆண்டு : ..................

பரீட்சை எண்: .................. பரீட்சை எண்: ..................

பாடம் சித்தி பாடம் சித்தி

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை:

ஆண்டு : .................. ஆண்டு : ..................

பரீட்சை எண் : .................. பரீட்சை எண் : ..................

பாடம் சித்தி பாடம் சித்தி

9. தொழில் தகைமை/ தொழில்நுட்பவியல் தகைமை : ..........................

9.1 பெற்றுள்ள பட்டம/ டிப்ளோமா : ..........................

9.2 குறிப்பிட்ட பட்டம்/ டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் : ..........................

9.3 குறிப்பிட்ட பட்டம்/ டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி : ..........................

10. வேறு தகைமைகள் : ..........................

11. தாங்கள் ஏதேனும் குற்றம் தொடர்பில் நீதிமன்றத்தில் தண்டனை பெற்றிருக்கிறீர்களா? ஆம்/ இல்லை : ..........................

11.1 ஆம் எனில், விபரத்தைக் குறிப்பிடவும் : ..........................

12. விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் தொழில் புரிபவரானால் பதவியின் பெயர், சேவை செய்யும் திணைக்களத்தின் பெயர் மற்றும், முகவரி

: ..........................

13. விண்ணப்பதாரி இதற்கு முன்பு அரச/ மாகாண அரச சேவையில் கடமை புரிந்தபின் விலகியிருந்தால் அவ்வாறு விலகியதற்கான காரணம் : ..........................

..........................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை பற்றிய விபரம் : ..........................

14.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கி : ..........................

14.2 பற்றுச்சீட்டின் இலக்கம் : ..........................

14.3 பணம் செலுத்திய திகதி : ..........................

(பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழன்றுவிடாதபடி இங்கே ஒட்டவும்.)

15. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.**- இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்களும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப சரியானவை மற்றும் உண்மையானவை என்று வெளிப்படுத்துகின்றேன். இந்த பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைய நான் தகுதியற்றவன் என்று காணப்பட்டால் விண்ணப்பதாரித் தன்மை வலிதற்றதாக்கப்படும் அல்லது நியமனத் துக்குப் பின்னர் தெரியவரின் சேவையில் இருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நானறிவேன். மேலும், இந்த பரீட்சை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகம் எடுக்கும் தீர்மானத்துக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

..........................,

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ..........................

16. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்.-

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................. அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் .................. ஆம் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

.........................., ..........................,

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை மாதிரிக் கையொப்பம். சான்றளிக்கும், அலுவலரின் கையொப்பம்.

சான்றுபடுத்தும் அலுவலரின் முழுப்பெயர் : ..........................

பதவி : ..........................

முகவரி : ..........................

திகதி : ..........................

(அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் தற்போது தொழில் புரியும் விண்ணப்பதாரியானால் கீழ்வரும் சான்றளிப்பை திணைக் களத்தின் தலைவர் செய்ய வேண்டும்.)

அரச அல்லது மாகாண அரச சேவை திணைக்களத் தலைவரின் சான்றளிப்பு

: ..........................

மேலே தகவல் வழங்கியிருக்கும் திரு./ திருமதி/ செல்வி .......................... என்பவர் இவ்வலுவலகத்தில் சேவை புரிகின்றார் என்றும் அவர் .......................... ஆக .................. ஆம் திகதி முதல் பதவியில் கடமை புரிகின்றார் என்றும் அவரின் சேவை திருப்திகர மானது என்றும் இந்தப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் அவர் நியமனத்துக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக் கப்படுவார்/ பட மாட்டார் என்றும் மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் உறுதியளிக்கின்றேன்.

..........................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் : ..........................


பதவி : ..........................

விலாசம் : ..........................

திகதி : ..........................

(இது தற்போதும் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் உரியது.)

# இலங்கையின் பொருளாதார
# உதவும் தெங்குப் பயிர்ச் செய்



தென்னை இலங்கையில் பிரதானமாக மழை நீரினால் வளர்க்கப்படும் ஒரு பயிராகும். குறித்த ஒரு ஆண்டு காலப்பகுதியில் 3-6 மாதங்கள் வரை இரண்டு வருடாந்தப் பருவ மழை காலமும் (மே - யூன் மற்றும் ஒக்டோபர் - நவம்பர்) அல்லது அதிகம் மழையில்லாத (வரண்ட) காலமும் மாறிமாறி நிகழ்கின்ற பருவ மழை காலங்களின் போது மண்ணமைப்பானது கள ஆற்றல் (உலர்ந்த / ஈர) நிலைமைக்கு பாகமாக அல்லது முழுமையாக மீளவளம் பெறலாம். தென்னை, வேர் படலத்தில் தேங்கி நிற்கும் நீரை உருஞ்சி கொள்ளும்.

30-40 தென்னை இலைகளை உடைய ஒரு வளர்ந்த தென்னை மரம் சராசரியாக நாளொன்றுக்கு ஏறக்குறைய 50 லீற்றர் நீரை (நாளொன்றுக்கு 20-160 லீற்றர் என்ற வீச்சில்) உருஞ்சிக் கொள்ளுகின்றது எனவும், அதே வேளை 10-15 தென்னை இலைகளைக் கொண்ட ஒரு இளம் தென்னை மரம் நாளொன்றுக்கு ஏறக்குறைய 10 லீற்றர் நீரை (5-15 லீற்றர் - நடுகைக்கன்று - நாள் என்ற வீச்சில்) நீராவி நிலையில் வெளிவிடுகின்றது எனவும் இலங்கைத் தென்னை ஆராய்ச்சி நிறுவகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் சுட்டிக் காட்டுகின்றன. உருஞ்சப்படும் நீரின் அளவானது நிலப்படலம், மற்றும் வழியலகுகள், மண் நீர் கிடைப்புத் தன்மை மற்றும் ஒத்தீட்டு ஈரத்தன்மை, வெப்பநிலை, காற்று, கதிர்ப்பு முதலியவற்றில் தங்கியிருக்கின்றது.

ஆகையால் மணல் தன்மை வாய்ந்த மண்ணில் வளர்ந்த ஒரு தென்னம் கன்றின் கிடைக்கத்தகு மண் நீர் ஏறக்குறைய 1000-4000 லீற்றர்கள் என்ற அளவிலிருக்கலாம். இந்த அளவான நீர் ஏறக்குறைய 20-80 வரையான நாட்களுக்குப் போதுமானதாகும். சதுப்புநில மண்ணிலுள்ள தென்னை வேர் தொகுதியில் ஏறக்குறைய 2000-4000 லீற்றர் வரையான மண் நீர் தேங்கி நிற்கும். இந்த தேங்கி நிற்கும் நீர் 40-160 வரையான நாட்களுக்குப் போதுமானதாகவிருக்கலாம். ஆதலால், ஒரு தென்னம் கன்று 20-160 நாட்கள் காலம் ஒன்றின் பின்னர் நீர் பற்றாக்குறையால் வாடலாம். தென்னம் மரமும் அதனை அடுத்துள்ள களைத் தாவரங்களும் நீரை உருஞ்சுவதாலும், மேற்பரப்பு மண் நீர் நீராவியாவதாலும் தென்னம் கன்றின் வேர் படலத்தில் கிடைக்கக் கூடிய மண் நீர் வற்றிப் போகுகின்றது.

பண்படுத்துதல், மூடு பயிர்களை வளர்த்தல், தென்னம் - தேங்காய்த் தோல்களை இட்டு நடுகைக் குழிகளை அமைத்தல், சமவுயரக்கோட்டு வட்டங்களை - மச்சுகளை - வடிகால்களை அமைத்தல் - வரம்புகளை இடுதல் போன்ற மண் நீர் சேமிப்பு நுட்பங்கள், மண் நீர் தேங்கி நிற்கும் ஆற்றலை அதிகரிக்க ஏதுவாக அமைந்து ஏற்றுக் கொள்ளக் கூடிய - உகந்த மழை வீழ்ச்சியை அதிகரிக்கக்கூடும். எனவே இந்த வகையான செயன் முறைகள் நீர் பற்றாக்குறையாகவிருக்கும் காலத்திற்கு (வரட்சி காலத்திற்கு) மாத்திரம் அதாவது ஏறக்குறைய 2-8 வாரங்கள் வரை தென்னையை ஈடு கொடுக்கச் செய்யும்.

ஆகையால் தென்னை வளர்ச்சி, அறுவடை ஆகியவற்றின் மீதான பாதகத் தாக்கங்களையும் மற்றும் தென்னை மரங்கள் இறந்து போவதையும் தடுக்கும் பொருட்டு 05 மாதம் அல்லது அதற்கு அதிகமாக நீண்ட காலம் மழையில்லாத வரண்ட காலத்தில் குறைநிரப்பு நீர்ப்பாசனத்தை வழங்குவது அத்தியாவசியம் என்பது தெளிவான விடயமாகும்.

தெபச இலங்கையிலுள்ள தென்னை அபிவிருத்தித் துறையில் தென்னை விஸ்தரிப்பும் ஆலோசனையும் தொடர்பான சேவைகள் வழங்குவதை தனது கட்டாயப் பொறுப்பாகக் கொண்டுள்ளது.

தெப சபையினது தென்னை விஸ்தரிப்பு தொடர்பான ஆலோசனை சேவைகளின் பிரதான குறிக்கோள்கள்

தென்னை வளர்ப்பவர்களுடன் கலந்துரையாடலை நடாத்தி அவர்களது தென்னம் காணி அபிவிருத்தி பற்றிய அறிவையும் திறனையும் அதிகரிக்கச் செய்து அவர்களது தென்னை வளர்ப்பை ஒரு நன்மை பயக்கும் செல்வச் சொத்தாக ஆக்குதல் .

தென்னை ஆராய்ச்சி நிறுவகத்தினது (தெஆநி) ஆராய்ச்சி முடிவு களிலிருந்து கிடைக்கும் நவீன அறிவையும் முற்போக்கான விவசாயிகளிடமிருந்து கிடைக்கும் அறிவையும் ஒன்றிணைப்பதன் மூலம் அறிவுத் தளத்தை நிர்மாணித்து பல்வேறு வழிகளினூடாக இவற்றை தென்னை வளர்ப்பில் அக்கறை உடைய விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்தல், தென்னை வளர்ப்பவர்களின் உண்மையான கள மட்டப் பிரச்சினைகளை அடையாளப் படுத்துதலும் இந்தக் குறிப்பான பிரச்சினைகளுக்குரிய பரிகார நடவடிக்கைகளைக் கண்டறிதலும்

தென்னை விஸ்தரிப்பும் ஆலோசனை சேவைகள் விஸ்தரிப்பும்

தெப சபையின் தென்னை விஸ்தரிப்புப் பண்ணை முறைமைகள் அபிவிருத்திப் பிரிவானது, தென்னை விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நிருவகித்தும் நடாத்தியும் வருகின்றது. இந்தப் பிரிவு நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள தனது 18 பிராந்திய அலுவல வலையமைப்பினூடாக தனது சேவைகளை வழங்குகின்றது. தெப தலைமை அலுவலகம், கமநல சேவை நிலயங்களில் (கொவி ஜனக் கேந்திர நிலையங்களில்) பணியாற்றும் தனது தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (தெஅஅ) ஊடாக குறித் தொகுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகளை இந்தப் பிராந்திய அலுவலகம் செயற் படுத்தும் என்பதுடன், அவற்றை நிருவகித்தும் வருகின்றது. தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் (தெஅஉ) கள உத்தியோகத்தர்களும் (கஉ) தென்னை விஸ்தரிப்பும் ஆலோசனையும் தொடர்பான சேவைகளை கள மட்டத்தில் பரப்பி வருகின்றனர். லுணுவில மற்றும் மெதமுலான ஆகிய இடங்களில் அமைந்துள்ள இரண்டு தென்னை அபிவிருத்திப் பயிற்சி நிலையங்கள் இந்த விஸ்தரிப்புச் செயற்பாடுகளுக்கு உதவி வருகின்றன.

தெபச செயற்படுத்தும் பிரதான தென்னை விஸ்தரிப்பு முறையியல்கள் பின்வருமாறு:

**தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட விஜயம்**

கள நாட்கள்
கருத்தரங்குகள்
பயிர்ப் பீடை நடவடிக்கை
குழுக் கலந்துரையாடல்கள்
செய்துகாண்பிப்பு முறைகள்
செய்துகாண்பிப்புப் பெறுபேற்று முறைகள்
கள விஜயங்கள்,
வெகுஜன ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள் அச்சிடப்பட்ட சாதனங்கள் (துண்டுப்பிரசுரங்கள், கைந்நூல்கள் முதலிய)
விவசாயிகள் பங்கேற்பு சார் கள ரீதியான செய்துகாண்பிப்புகள்
பிராந்திய மற்றும் தேசிய மட்டக் கண்காட்சிப் பங்கேற்பு
விவசாயிகள் மையக் களப் பாடசாலைகள்

**பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

தெபச, தென்னை வளர்ப்பவர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கும் தொழில் நுட்பத்தைக் கிட்டச் செய்யும் பொருட்டு தென்னைப் பயிர்ச்செய்கையின் அனைத்து அம்சங்கள் தொடர்பான உள்ளக சார் சேவைப் பயிற்சிகள், கருத்தரங்குகள், வேலையரங்குகள் போன்ற பல வகை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி வருகின்றது.

**கிராம மட்ட அமைப்புகளினூடான தென்னைப் பயிர்ச்செய்கை விஸ்தரிப்பு**

தெபச நாடளாவிய ரீதியில் கிராமிய மட்டத்தில் தொழிற்படுகின்ற பல அமைப்புகளை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தி இறுதிப் பயன் பெறுநருக்கு தொழில்நுட்பத்தைக் கிட்டச் செய்கின்றது. மரண நன்கொடைச் சங்கம், சனச, அரச சாரா நிறுவனங்கள் முதலியன, தெ சபையுடன் சிறந்த தொடர்புகளைக் கொண்டுள்ள கிரா
வகைப் பிரதான அமைப்புகளாகும்.

தெபச எப்பொழுதும் தென்னை
தர்களிடமிருந்து (தெஅஉ) தொழி
பவர்களுக்கும் தென்னை வளர்ப்ப
விருத்தி உத்தியோகத்தர்களுக்கும்
யும் முகமாக இரு வழித் தொடர்
வருகின்றது. தென்னை வளர்ப்பவர்
செய்கை பற்றிய சுதேசிய அறிவு
நாம் உணர்கின்றோம். இந்த அறி
நருக்குப் பொருத்தமாக விளங்கும்
சார் சேவைகளையும் வழங்க எமக்

எமக்கு லுணுவில மற்றும் மெத
இரு தென்னை அபிவிருத்திப் பயி
காணப்படுகின்றன.

லுணுவில - தென்னை முக்கோ
அமைந்துள்ளது

மெதமுலான - இலங்கை ன் தெ
அமைந்துள்ளது

லுணுவில தென்னை அபிவிருத்
பண்டிருப்புவ என்ற தோட்டத்திலுள்
கத்தின் வளாகத்திற்கு அருகில் அ
செய்கைக்கான சபையில் பணியாற்
கும் மற்றும் தென்னை வளர்ப்பவர்
திட்டங்களைத் தவிர இந்தப் பயிற்
விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை

இந்தப் பயிற்சி நிலையம் முப்ப
விரிவுரை மண்டப, கேட்போர்கூட
வசதிகளையும் கொண்டுள்ளது. இ
திய அலுவலகங்களினால் நடாத்த
தென்னை விஸ்தரிப்பு பற்றிய நிக
தேவையான மூலப்பொருட்கள், வ
ணைப்பு வசதிகள் என்பவற்றையும்

**பயிற்சி உத்தியோகத்தர்கள்**

லுணுவில தென்னை அபிவிருத்
வாய்ந்த பயிற்சி உத்தியோகத்தர்க
உத்தியோகத்தர்கள் வேறுபட்ட வி
விடய நிபுணத்துவர்கள் எ ழை
அனைவருமே பல துறைக ல வி
பரப்புகளில் பட்டப்பின்படிப்புத் தகை
பட்டங்களையும் பெற்ற பட்டதாரிக


**பிரதான செயற்பாடுகள்**

தென்னை அபிவிருத்திப் பயிற்சி
தொழிற்பாடுகளும் அதன் பொறுப்



# வளர்ச்சிக்கு

# கை



கிராமிய மட்டத்தில் இயங்கும் பல
தும்.
ன அபிவிருத்தி உத்தியோகத்
ாழில் நுட்பத்தை தென்னை வளர்ப்
ப்பவர்களிடமிருந்து தென்னை அபி
கும் (தெஅஉ) பரிமாற்றல் செய்
டர்பாடல் மார்க்கத் தைப் பின்பற்றி
பவர்களின் தென்னைப் பயிர்ச்
வு மிக முக்கியமானது என்பதை
அறிவானது இறுதிப் பயன் பெறு
தும் சிபாரிசுகளையும் ஆலோசனை
ாமக்கு உதவியாக அமையும்.
மதமுலான ஆகிய இடங்களில்
பயிற்சி நிலையங்கள்

காணப் பகுதியினுள்

தென் ப[illegible]தியத்தில்

ந்த்திப் பயிற்சி நிலையம் லுணுவில
லுள்ள தென்னை ஆராய்ச்சி நிறுவ
அமைந்துள்ளது. தென்னைப் பயிர்ச்
பாற்றும் உள்ளக அலுவலர்களுக்
பவர்களுக்குமான பயிற்சி நிகழ்ச்சித்
யிற்சி நிலையம் தேசிய தென்னை
ளையும் கையாண்டு வருகின்றது.
ப்பது ஆட்களுக்கான முழுமையான
வசதிகளையும் மற்றும் தங்குமிட
இந்தப் பயிற்சி நிலையம் பிராந்
த்தப்படுகின்ற பயிற்சிகளுக்கும்
நிகழ்ச்சித் திட்டங்களுக்கும்
வளங்கள், வழிகாட்டிகள், ஒருங்கி
ும் ஏற்பாடு செய்து வழங்குகின்றது.

ந்த்திப் பயிற்சி நிலையத்தில் தகுதி
தர்கள் காணப்படுகின்றனர். இந்த
விடயப் பரப்புகளிலான பாட
ழைக்கப் ப[illegible]ன்றனர். இவர்கள்
விஷேடமய[illegible]ட்ட பாடப்
தகைமைகளையும் விவசாயப்
ரிகளாவர்.

ற்சி நிலையத்தின்
ுப்புக்களும் பின்வருமாறு:



தென்னை நடுகையின் கீழுள்ள காணிகளின் உற்பத்தித் திறன் மேம்பாட்டுக்கு உதவுதலும் அந்தக் காணிகளை அபிவிருத்தி செய்தலும், தென்னையை வளர்த்தல் மற்றும் தென்னம் தோட்டங்களில் ஏனைய பயிர்களை வளர்த்தல் தொடர்பான உகந்த பயிர்ச்செய்கைச் செயன் முறைகளுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல், பிரபல்லியமடையச் செய்தல், ஊக்குவித்தல் மற்றும் பணிப்புரைகளை வழங்குதல், நாடளாவிய ரீதியில் தேசிய மட்டத்தில் தென்னை வளர்ப்பவர்களுக்கான பயிற்சியும் ஆலோசனையும் சார்ந்த சேவை நிகழ்ச்சித்திட்டங்களையும் நாட்டிலுள்ள தென்னை வளர்ப்பவர்களுக்கான வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துதல்

நாட்டில் பல துறைகளிலுமுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தென்னைப் பயிர்ச்செய்கைச் செயன்முறைகள் பற்றிய பயிற்சிகளை வழங்குதல், நாடு முழுதிலும் பரந்தளவில் பூச்சிகளையும் தென்னைக்கு ஏற்படும் நோய்களையும் கட்டுப்படுத்துவது பற்றியும் தென்னைக்கு நோயை உண்டாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவற்குத் தேவையான பூச்சி நாசினிகளைப் பகிர்ந்தளிப்பது பற்றியும் மக்களுக்குப் பயிற்சியளித்தல் தென்னைப் பயிர்ச்செய்கைக்கு உகந்த காணிகளை இனம்கண்டறிதலும் பண்ணை அபிவிருத்திற்குக் குறைந்த வட்டி வீதத்திலான மற்றும் வட்டியற்ற கடன்களைக் கொண்டு அந்தக் காணி உரிமையாளர்களுக்கான பண்ணைத் திட்டமிடலை ஏற்பாடு செய்து வழங்குதலும்.

பண்ணைக்கான விஜயங்கள், பயிற்சிகள், கள நாட்கள், கருத்தரங்குகள் மற்றும் பிரசார நடவடிக்கைகள் முதலியவற்றினூடாக தென்னை வளர்ப்பவர்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் தொழில் நுட்பங்களையும் வழங்குதல்.

அதிக உற்பத்தித்திறனின் நிமித்தம் தென்னம் காணிகளில் விலங்கு வளர்ப்பை அறிமுகப்படுத்துதலும் ஊக்குவித்தலும்

நாட்டிலுள்ள தென்னை வளர்ப்பவர்களுக்கு அவசியமெனும் துண்டுப் பிரசுரங்கள், செய்தித்தாள்கள், கைந்நூல்கள் மற்றும் பல வகைக் கற்புல செவிப்புல சாதனங்கள் என்பவற்றை வழங்குதல்

தென்னை வளர்ப்புத் துறை சார்ந்த தேசிய மட்டக் கண்காட்சிகளையும் பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களையும் இன்னும் பாடசாலை மட்டக் கண்காட்சிகளையும் நடாத்துதல்.

**உள்ளக ஊழியர்களுக்கான பயிற்சி**

லுணுவில தென்னை அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தினது அலுவலர்கள் அனைத்து வகையான உள்ளகப் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றனர். தேவையான் போது எமது உள்ளக ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தும் பொறுப்பை நாம் வெளித் தரப்புகளுக்கு ஒப்படைக்கின்றோம். அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் லுணுவில தென்னை அபிவிருத்திப் பயிற்சி நிலைய வளாகத்தில் நடாத்தப்படுகின்றன. அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு:

**உதவிக் கணக்காளர் மற்றும் கணக்கு எழுதுநர்கள்** ஆகியோருக்கான நிதி முகாமைத்துவம், முகாமைத்துவ உதவியாளர்களுக்கான அலுவலக முகாமைத் துவம், ஒழுக்காற்று முகாமைத்துவம், 5 S முறைமைகள், அலுவலக நிர்வாகத் திறன்கள் முதலியன பற்றிய பயிற்சிகள்.

பண்ணைத் திட்டமிடல் உத்தியோகத்தர்களுக்கான பண்ணை முகாமைத்துவம், நீர்ப்பாசன முறைமைகள், வங்கியியல் முறைமைகள் பற்றிய பயிற்சி. தோட்ட முகாமையாளர்களுக்கான தென்னம் தோட்ட உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் ஆளுமை விருத்தி மற்றும் தனியாள் அபிவிருத்தி என்பன பற்றிய பயிற்சி.

நடுகைக்கன்றுப் பாத்திகள் பற்றிய உத்தியோகத்தர்களுக்கான நடுகைக்கன்றுப் பாத்திப் பராமரிப்புச் செயன் முறைகள் பற்றிய பயிற்சி, தென்னை வளர்ப்பு மற்றும் ஏனைய பயிரிடல் முறைமைகளில் பிராந்திய முகாமையாளர்களுக்கும் உதவிப் பிராந்திய முகாமையாளர்களுக்குமான தொழில் நுட்ப அபிவிருத்தி மேம்பாடு.

பிராந்திய முகாமையாளர்களின் முகாமைத்துவ ஆற்றல்கள் மேம்பாடும் நிர்வாகத் திறன் அபிவிருத்தியும், சாரதிகளுக்கான வாகனப் பராமரிப்பும் வீதிப் பாதுகாப்பு ஒழுங்கு முகாமைத்துவமும் பற்றிய பயிற்சி. ஏனைய அனைத்து ஊழியர்களுக்குமான சம்பந்தப்பட்ட பிற அனைத்து வகைப் பயிற்சிகளும்.

**தென்னை சென்னிற வீவில் வண்டுப் பாதிப்பு**

இந்தத் தென்னை சென்னிற வீவில் வண்டு (ரைனோகொபொகரஸ் பெகரோகினியஸ்) இன்று நாட்டில் தென்னை வளரும் சகல பகுதிகளிலும் காணப்படும் மிகக் கடுமையாகத் தீங்குவிளைவிக்கும் பூச்சியாகும். பொதுவாக 3-15 வயதான தென்னை மரங்கள் இந்தப் பூச்சியின் தாக்குதலுக்கு இலகுவில் ஆளாகலாம்.

**பாதிப்பு:**

வளர்ந்த பெண் வண்டுகள் அடித்தண்டில் முட்டைகளை இட்டுப் பெருகி மரத்திற்குத் தீங்குகளை எற்படுத்தும் நடுகைக்கன்றுப் பாத்திகள் பராமரிப்பு

ஏனைய பயிர்களைப் போன்று களத்தில் நேரடியாக வித்துக்களை இட்டு தென்னையை நடும் நடவடிக்கை சிபாரிசு செய்யப்படுவதில்லை. ஒரு நடுகைக்கன்றுப் பாத்தியில் 7-10 மாதங்கள் வரை வளர்ந்த தென்னம் வித்துக்கள் மாத்திரமே கள நடுகைக்காகச் சிபாரிசுசெய்யப்படுகின்றன. இந்த நடபடிக்கையில் தென்னம் வித்துக்களை துல்லியமான முறையில் ஒரே சீராக வளர்க்க முடியும்.

நடுகைக்கன்றுப் பாத்திகள் பராமரிப்பு முறை

நடுகைக்கன்றுப் பாத்திக்கான ஸ்தலத்தைத் தேர்ந்தெடுத்தல்:

நடுகைக்கன்றுப் பாத்தியை அமைக்க உத்தேசித்திருக்கும் காணி கரடு முரடுகளில்லாத சம தரையாகவிருத்தல் வேண்டும். இந்தக் காணியின் மண் சிறந்த முறையில் நீர் வடியத்தகுந்த மணல் கலந்த அல்லது களி மண் கலந்த மண்ணாகவிருத்தல் வேண்டும். நடுகைக்கன்றுப் பாத்தியை அண்மித்த பகுதியில் போதியளவு சூரியவொளி படக்கூடிய தன்மை, நிழல் பரந்திருத்தல் மற்றும் நீர் வளமிருத்தல் என்பன நடுகைக்கன்றுப் பாத்திகளுக்கான ஸ்தலத்தைத் தேர்ந்தெடுப்பதில் காணப்படும் அடிப்படைக் காரணிகளாகும். க்ளிறிசீடியா என்ற தாவரங்களினால் வேலியொன்றை அமைப்பதன் மூலம் ஒரே சீரான நிழலை வழங்க முடியும்.

**நடுகைக்கன்றுப் பாத்திகள்:**

வழமையான செயற்பாடுகள் உள்ளிட்ட முகாமைத்துவச் செயன் முறைகளின் சாத்தியமான தன்மையின் அடிப்படையில் நடுகைக்கன்றுப் பாத்தியின் அகலத்தைத் தீர்மானித்தல் வேண்டும். காணித் துண்டுகளின் நீளத்தினாலும் அமைப்பினாலும் நடுகைக்கன்றுப் பாத்தியின் நீளத்தைத் தீர்மானிக்கலாம்.

**நன்றி : இணையம்**

# அவுஸ்திரேலியா செல்ல முயற்சி: காட்டில் பதுங்கியிருந்த 18 பேர் கைது

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் சென்று படகு கோளாறு காரணமாக மீண்டும் கரைக்குத் திரும்பி காட்டில் மறைந்திருந்த சிலர் திஸ்ஸமகாராம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (08) இரவு 9 அளவில் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றை அடுத்து திஸ்ஸமகாராம பொலிஸார் குறித்த இடத்திற்குச் சென்றுள்ளனர்.

ஆமதுவ கடற்பரப்பில் மிதந்துக் கொண்டிருந்த ரோலர் படகொன்றை மீட்ட பொலிஸார் அருகில் உள்ள காட்டில் மறைந்திருந்த சிலரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 10 சிங்களவர்களும் 7 தமிழர்களும் ஒரு முஸ்லிமும் அடங்குவர்.

இவர்கள் கடந்த மாதம் 15ம் திகதி ஹுங்கம - ரெக்கவ பிரதேச கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்தது.

மேலும் விசாரித்த போது, பயணித்த படகில் 32 பேர் இருந்ததாகவும் படகு கோளாறு காரணமாக மீண்டும் கரைக்குத் திரும்பியதாகவும் சிலர் அருகில் உள்ள காட்டில் தங்கியிருக்கலாம் அல்லது தப்பிச் சென்றிருக்கலாம் எனவும் தெரியவந்துள் ளது.

இதேவேளை, கரை திரும்பிய நபர்களை அழைத்துச் செல்ல வென்னப்புவ பகுதியில் இருந்து வந்த 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கண்டேனர் வாகனம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. திஸ்ஸமகாராம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். புற்றுநோய் வைத்திய சாலை:

# சிறுவர்களின் வைத்திய தேவைக்காக நிதி உதவி

வலிகாமம்

யாழ்ப்பாணம் புற்றுநோய் வைத்தியசாலையில் உள்ள குழந்தைப் பிள்ளைகளின் தேவைகளுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்ககாக மாவட்ட இலக்கம் 3230 இந்தியா நங்கநல்லூர் றோட்டறிக்கழகம் கொழும்பு கிழக்கு 6920 மாவட்டம் ஜொர்ஜியா யுஎஸ்எ றோட்டறிக்கழகம என்பன இணைந்த சுமார் பத்து இலட்சம் ரூபாவுக்கம் மேற்பட்ட நிதியை வழங்கியுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் வைத்து இந்த நிதியை கொழும்பு கிழக்க றோட்டறிக் கழக முன்னாள் தலைவர் லசந்த விஜயவீர யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி என்ஜேயக்குமாரிடம் கையளித்தார்.



கலாநிதி ஆறு திருமுருகனுக்கு ஸ்கந்தா சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட நன்றிப்பெருவிழாவில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் ஆறு திருமுருகன் கௌரவிக்கப்படு வதையும் படங்களில் காணலாம். (மாவிட்டபுரம்)

## சிறுகதையில் முதலிடம் பிடித்தார் சிவராஜா

தெல்லிப்பழை

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கியக் குழுவும் இலங்கையர்கோன் பரிசில் நிதியமும் இணைந்து நடாத்திய இலங்கையர்கோன் நினைவு அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் வேலாயுதம் சிவராஜா தமிழ் பௌத்தன் எனும் தனது சிறு கதைக்காக முதலிடம் பெற்றுள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச ச[illegible] சேவை உத்தியோகத்தரான இவர் நீண்ட காலமாக சிறுகதைகளை எழுதி வருவதுடன் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் பல்வேறு போட்டிகளிலும் பரிசுகளையும் விருதுகளையும் பெற்றவர்.

## மீளாய்வுக் கூட்டம்

தெல்லிப்பழை

இந்திய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் 79 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாண வேலைகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் யாழ் பொது நூலகத்திலுள்ள வட மாகாண சபை கேட்போர் கூடத்தில் ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன் தலைமையில் கடந்த 05ம் திகதி நடைபெற் றது.

வட மாகாண ஆளுநர் சார்பாக ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் இக்கலந்துரையடலில் பங்குபற்றினார்.

வட மாகாண கல்வி அமைச்சின் பாடசாலைகள் வேலைகள் பணிப்பாளர், இந்திய தூதரக அதிகாரி, மாவட்ட பாடசாலை வேலைகள் பொறியியலாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் கட்டட ஒப்பந்தக்காரர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது 100 வீதம் பாடசாலைகளின் புனர்நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# தேசிய தடகளப் போட்டியில் வென்றவர்களுக்குப் பாராட்டு

“மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்தவர்களுக்கு கௌரவிப்பு செய்வது காலத்தின் கடமையாகும். ஆனால் இந்தக் கௌரவிப்புக்கள் கவனிக்கப்படாத நிலையில் பல இடங்கள் உள்ளன” இவ்வாறு இலங்கை போக்குவரத்து வட பிராந்திய முகாமையாளர் எ. அஸ்கர் தெரிவித்தார்.

சேவைநலன் பாராட்டு விழா மற்றும் தேசிய மட்ட தடகளப் போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மதியம் யாழ் சாலையில் யாழ். கோண்டாவில் சாலை முகாமையாளர் க. குலபாலசெல்வம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

போக்குவரத்துச் சபையிலே பணிபுரியும் ஊழியர்களின் சம்பளம் குறைவாக இருக்கின்றபோதும், சேவையே உயர்வு என்று குறைந்த சம்பளத்துடன் பணியும் ஊழியர்களை கௌரவிக்கும் இந்த நிகழ்வு, வட பிராந்தியத்தில் கோண்டாவிலில் மட்டுமே நடைபெறுகின்றது. இப்படியான இந்த விழாக்களினால் சம்பளம் குறைவு என்று சோர்ந்து போகும் ஊழியர்களை சோர்வடையச் செய்யாமல் செய்வதோடு மேலும் அவர்கள் ஆசையுடனும் ஆவலுடனும் பணிபுரிய இது களமமைத்துக் கொடுக்கின்றது.

ஒருவருக்குள் இருக்கும் திறமைகள் எளிதில் வெளிப்படுவதில்லை. அது வெளிப்படுவதற்கு சந்தர்ப்பங் களும் தட்டிக்கொடுத்தலும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. அவற்றினைச் செய்வதில் பலருக்கு விருப்பமில்லை. இதனால் பெறுகின்ற வெற்றிகள் குறைவாக இருக்கின்றன.

தேசிய மட்டத்தில் வெற்றியீட்டி பதக்கம் பெறுவது வெறுமனே விளையாட்டான விட யமல்ல. அவற்றிற்கான உங்கள் முயற்சி பாராட்டப்பட வேண்டிய வை. அந்த முயற்சிகளைத் தொடர்ந்து பின்பற்றுங்கள் என்றார்.

இந்நிகழ்வில் பொறியியல் பகுதியில் சேவையாற்றி ஓய்வு பெற்ற சி. சிவபாதசுந்தரம் அவர்களுக்கு வாழ்த்துப் பாமாலை வாசித்து பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவற்றோடு இலங்கை போக்குவரத்துச் சபையால் மாத்தளையில் நடாத்தப்பட்ட தேசிய தடகள விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய பின்வரும் வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். முருகநேசன், ஏ.கே. மோகனகிருஸ்ணன், கே.புவிவை. தினேசன், பி. சுதர்சன், எஸ். சதீஸ்குமார், ரி. சுதாஸ்கர் ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஜனநாயக போக்குவரத்துச் சங்கத் தலைவர் கெங்காசுதன், ஸ்ரீலங்கா தேசிய போக்குவரத்துத் தலைவர் சிவகுமார், யாழ். சாலை செயலாற்று முகாமையாளர் கேதீஸ்வரன், சாலை விசாரணை உத்தியோகத்தர் தெய்வேந்திரம், பொறியியலாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கூட்டம் கூடுவதற்கு 15 வரை தடை


தேர்தல் முடிவடைந்த போதிலும் மூன்று மாகாண சபைகளிலும் ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் தடை விதிக்கப்பட்டிருப்பதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண கூறினார்.,

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்தி ஆகிய மூன்று மாகாண சபைகளிலும் எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் தேர்தலுக்குப் பின்னரான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.




யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகம் யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் வியாழக்கிழமை நடத்திய சேவை மூலம் சமாதானம் என்னும் பொருளிலான கருத்தரங்கின்போது இடம் பெற்ற சுண்டுக்குளி மகளிர் மாணவிகளின் நடன நிகழ்வைப் படங்களில் காணலாம். (வலிகாமம்)

# ஜிமெயில் தகவல் திருடப்படுகிறதா?




மின்னஞ்சல் பயன்பாட்டில் ஜிமெயில் அக்கவுண்ட் முதல் இடத்தில் உள்ளது. மின் அஞ்சல் வசதியை அடிக்கடி பயன்படுத்தாதவர்களும், எதற்கும் இருக்கட்டுமே என்று ஒரு ஜிமெயில் அக்கவுண்ட்டை வைத்திருப்பார்கள்.

ஜிமெயில் தளத்தில் இப்போது புதியதொரு வசதி கிடைக்கிறது. இது "Last account activity" என அழைக்கப் படுகிறது. இந்த வசதியை இயக்கிவிட டால், உங்கள் ஜிமெயில் தளத்தை கடைசியாக யாரெல்லாம் அணுகிப் பார்த்தார்கள் என்ற பட்டியல் காட்டப்படுகிறது. கம்ப்யூட்டரில் பிரவுசர் வழியாகவோ, பி.ஓ.பி. மெயில் கிளையண்ட் வழியாகவோ அல்லது மொபைல் போன் மூலமோ, எந்த வகையில் உங்கள் ஜிமெயில் பார்க்கப் பட்டிருந்தாலும், அதனை இந்த வசதி பட்டியலிடுகிறது. எந்த ஐ.பி. முகவரியிலிருந்து இது பார்க்கப்பட்டது என்று காட்டுகிறது. வழக்கத்திற்கு மாறாக ஏதேனும் ஒரு ஐ.பி. முகவரியிலிருந்து உங்கள் ஜிமெயில் தளம் திறக்கப்பட்டிருந்தால், அதனைக் காட்டி எச்சரிக்கை செய்கிறது. எந்த நாள், நேரம் என்பவையும் பட்டியலில் கிடைக்கின்றன.

இதனைக் காண உங்கள் ஜிமெயில் தளத்தின் கீழாக, Last account activity என்ற வரிக்கு அருகே ஹுநவயடைள என்பதில் கிளிக் செய்திடவும். உடன் தகவல்கள் அடங்கிய பட்டியல் கிடைக்கும்.

இந்த பட்டியலில் Access type என்பதில், என்ன மாதிரியான வகையில் (பிரவுசர், மொபைல் போன், பி.ஓ.பி. கிளையண்ட் போன்றவை) உங்கள் தளம் அணுகப்பட்டது என்று காட்டப்படுகிறது. இந்த பட்டியலில் நீங்கள் பயன்படுத்தாத வகை எதுவும் காணப்பட்டால், உடனே உங்கள் அக்கவுண்ட் தகவல்களை (யூசர் நேம், பாஸ்வேர்ட்) யாரோ திருடி இருக்கிறார்கள் என நீங்கள் அறிந்து கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, நீங்கள் மொபைல் போன் வழி இணையத்தைப் பார்க்கும் வழக்கம் இல்லாதவராக இருந்து, பட்டியலில் மொபைல் போன் வழி பார்க்கப்பட்டது காட்டப்பட்டால், உங்கள் அக்கவுண்ட் திருடு போயுள்ளது என அறியலாம்.

அடுத்ததாக, Location (IP address) என்ற தலைப்பின் கீழ், உங்கள் ஜிமெயில் அக்கவுண்ட்டை அணுகிய பத்து ஐ.பி. முகவரிகள் தரப்படுகின்றன. இதில் சந்தேகப்படும்படியான ஐ.பி. முகவரிகள் எச்சரிக்கப்பட்டு காட்டப்படுகின்றன. இவ்வாறு ஏதேனும் காட்டப்பட்டால், உடனடியாக உங்கள் ஜிமெயில் அக்கவுண்ட்டின் பாஸ்வேர்டினை மாற்றுவது நல்லது.

உங்களுடைய ஐ.பி. முகவரியும் பட்டியலில் இருக்கும். இது உங்களுடையதுதானா? என்று எப்படி அறியலாம். இணைய இணைப்பு பெறுபவர்களுக்கு, ஒவ்வொரு முறையும் ஒரு ஐ.பி. முகவரி தரப்படுகிறதே என்ற சந்தேகம் உங்களுக்கு வரும். நீங்கள் பயன்படுத்தும் இணைய இணைப்பின் ஐ.பி. முகவரியின் முதல் இரு எண்கள் எப்போதும் மாறாமல் இருக்கும். எடுத்துக்காட்டாக, 172.16.xx.xx என்ற எண்ணில் இங்கு காட்டப்பட்டுள்ள முதல் இரு எண்களும், நீங்கள் ஒரே இணைய இணைப்பைப் பயன் படுத்தினால் எப்போதும் மாறாமலே இருக்கும். அதே போல, மொபைல் போன் வழியே ஜிமெயில் காண்பவர்களுக்கு, மொபைல் சேவை வழங்கும் நிறுவனத்தின் முதல் எண்கள் மாறாமல் இருக்கும். இவற்றிலிருந்து உங்களுடைய ஐ.பி. முகவரியினை அடையாளம் தெரிந்து கொள்ளலாம்.

ஒரே நேரத்தில், இருவேறு கம்ப்யூட்டர் களில், இருவேறு இணைய இணைப்பு மூலம் ஜிமெயில் அக்கவுண்ட்டினை அணுகினால், அவை Concurrent sessions என்பதன் கீழ் தரப்படும். வழக்கத்திற்கு மாறான ஐ.பி. முகவரிகளில் இருந்து அக்கவுண்ட் பார்க்கப்பட்டதாக இருந்தால், அந்த முகவரிகளுக்கு இந்த எச்சரிக்கைப் பட்டியல் காட்டப்படாது.

நம் அக்கவுண்ட் தகவல்கள் திருடப் பட்டுவிட்டன என்று உறுதியாக அறிந்தால், பாஸ்வேர்ட் மாற்றுவதுடன், கூகுள் http://www.google.com/help/security/ என்ற முகவரியில் தரப்படும் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் பின் பற்றவும்.

நான் அடிக்கடி கம்ப்யூட்டர், இணைய இணைப்பு, மொபைல் போன் ஆகியவற்றை மாற்றி என் ஜிமெயில் தளத்தினை அணுகுகிறேன். எனவே இது போலக் காட்டப்படும் எச்சரிக்கை பட்டியல் எனக்குத் தேவையில்லை என்று கருதுகிறீர்களா? அப்படியானால், இந்த வசதி இயங்குவதை நிறுத்திவிடலாம். இந்த பட்டியலின் கீழாக இதற்கான வசதி தரப்பட்டிருக்கிறது. ஆனால், நீங்கள் ஒப்சன் தெரிவித்து ஒரு வாரம் கழித்தே இந்த வசதி நிறுத்தப்படும்.

## கூகிள் ஏன் பிடிக்கவில்லை காரணத்தை சொல்லுங்கள் பரிசுகளை வெல்லுங்கள்!

எதைத் தேடினாலும் கொடுக்கும் கூகிள் தேடுபொறி உங்களுக்கு ஏன் பிடிக்கவில்லை அல்லது கூகிளில் சில பிழை செய்திகளை நீங்கள் பார்த்திருக்கலாம், இப்படி பிழையான செய்திகளையும் கூகிள் உங்களுக்கு ஏன் பிடிக்கவில்லை என்ற காரணத்தையும் தெரியப்படுத்தினால் பரிசு கொடுக்க ஒரு தளம் இருக்கிறது.

கூகிளின் பிழையை அல்லது கூகிள் ஏன் பிடிக்கவில்லை என்ற





காரணத்தை கூறியே நாம் உலக அளவில் பிரபலமா கலாம் பரிசுகளையும் வெல்லலாம். இதைப்பற்றி இனி விரிவாக பார்க்கலாம்.

இணையத்தில் உலாவரும் அனைவரும் இந்தப் போட்டியில் பங்கேற்கலாம், மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலதிபர்கள், கிராமத்து புத்திசாலிகள் என யார் வேண்டுமானாலும் எந்த நாட்டில் இருந்தாலும் Bug Google போட்டியில் பங்கேற்கலாம்.

கூகிள் தேடுபொறி உங்களுக்குப் பிடிக்கவில்லையா? அல்லது பிழை செய்தி சொல்கிறதா? ஏன் பிடிக்கவில்லை? எதற்காக பிடிக்கவில்லை? என்ற காரணத்தை விரிவாக எழுதி Bug Google -ற்கு ஈமெயில் மூலம் தெரியப்படுத்தி சிறந்த பல பரிசுகளை வெல்லுங்கள்.

ஈமெயில் முகவரி: contest@buggoogle.com இந்தப் போட்டிக்கு அக்டோபர் 12-ம் தேதி இரவு 12 மணி வரை வரும் பதில்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

## சீமோஸ் அல்லது கடிகார பட்டரி




கணினியின் சீமோஸ் அல்லது கடிகார பட்டரி எங்குள்ளது என கண்டு பிடித்து எப்படி அதனை கழற்றி புதிய பட்டரியை அவ்விடத்தில் மாற்றியமைப்பது என இப்போது காண்போம். இது கணினியின் அமைவுகளை சரியாக கணக்கிட்டு தாய்ப் பலகையின் மின்சுற்றிற்குள் சேமித்திட பயன்படுகின்றது நம்முடைய கணினியானது இயக்கத்திலிருந்தாலும் செயல்படாது இருந்தாலும் இந்த கடிகார பட்டரியானது எப்போதும் தொடர்ந்து சீமோஸ் அமைப்பை செயல்படுமாறு செய்திட பயன்படுகின்றது அதனால் குறிப்பிட்ட கால இடைவெளியில் CR2032 என்ற இந்த சீமோஸ் பட்டரியை புதியதாக மாற்றியமைத்து கொள்வது நல்லது என பரிந்துரைக்கப் படுகின்றது.

முதலில் கணினிக்குள்ள செல்லும் மின் வழங்கும் பொத்தானை அணைத்துவிட்டு அதற்கான கேபிளை பிளக்கிலிருந்து கழற்றிவைத் தவிட் டோமா என உறுதி செய்து கொண்டு கணினியை மூடியி ருக்கும் பெட்டியை திறந்திடுக பின் படத்திலுள்ளவாறு சீமோஸ் பட்டரி பொருத்தப் பட்டி ருக்கும் லிவரை நகர்த்தி பழைய பேட்டரியை எடுத்துவிட்டு புதிய பட்டரியை பொரு த்தி அதனுடைய லிவரை பழைய நிலையில் நகர்த்தி அமைத்திடுக. இதன் பின் மின்இணை ப்பை கணினிக்கு ஏற்படுத்தி கணினியை மறுதொ டக்கம் செய்திடுக அப்போது விசைப்பலகையில் Del அல்லது ஆகியவற் றிலொரு விசை யை அழுத்தி mother board settings ஐ time/date மறு அமைவுசெய்து சேமித்தபின் மீண்டும் கணியை மறுதொடக்கம் செய்து இயக்கிடுக.

## காத்திடுவோம் கடவுச் சொற்களை

தற்போது யாகூவின் கணக்கு வைத்திருப் பவர்களின் 450000 கணக்குக ளுடைய கடவுச்சொற்கள் அபகரிக்கபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன இவ்வாறான ஆபத்திலிருந்து நம்முடைய கணக்கினை காப்பதற்கான ஆலோசனை பின்வருமாறு:

நமக்கு வெவ்வேறு இணைய-தளங்களில் பல்வேறு கணக்கிருந் தால் அவை ஒவ்வொன்றிற்கும் ஒரே கடவுச்சொல்லை பயன்படுத் திட வேண்டாம் ஒவ்வொரு கணக்கிற்கு வெவ்வேறு கடவுச் சொற்களை பயன்படுத்திடுக.



நாம் பயன்படுத்தும் இணையதள கணக்கினை அதன் பயன் முடிந்ததும் கணினியை விட்டு வெளியேறுமுன் அந்த கணக் கினை மூடிவிட்டு வெளியேறுக.

நம்முடைய கணினியில் இயங்கும் எதிர்நச்சுநிரல் பயன்பாட் டினை அவ்வப்போது நிகழ்நிலைபடுத்தி கொள்க.

அனைவரும் பயன்படுத்திடும் பொது கணினியை பயன்படுத்தி நம்முடைய இணைய தள கணக்கில் உள்நுழைவு செய்து பயன படுத்து வேண்டாம்.




நம்முடைய கடவுச்சொற களை மற்றவர்க ளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

அவ்வப்போது குறிப்பிட்ட காலமுறைப்படி நம்முடைய கணக்கிற்கான கடவுச்சொற்களை மாற்றியமைத்து கொண்டேயிருந்திடுக.

இந்த கடவுச்சொற்களானது எளிதாக நினைவில் கொள்ளு மாறும் அதே சமயத்தில் யூகிப்பதற்கு கடினமாகவும் இருந்திடு மாறு இக்கடவுச் சொற்களை கட்டமைத்திடுக.

ஒரு சில இணையதளங்கள் நாம் கட்டமைத்திடும் கடவுச் சொற்கள் வலுவானதா வலுவற்றதாவென ஆய்வுசெய்து கூறிவிடும் அவ்வாறான தளங்கள் கூறும் மிகவலுவான கடவுச்சொற்களையே எப்போதும் கட்டமைத்திடுக.

ஏன் ஸ்நோபாலை விரட்டவேண்டும் என்று கேட்டால்' அது தீய குணங்கள் படைத்த விலங்கு, விலங்குகளின் எதிரி. மற்றவர்கள் வேலை செய்வதையும் தடுக்கும் துர்க்குணம் படைத்த துரோகி, இதெல்லாம் ராஜ்ய தந்திரம் என்றது ஸ்க்வீலர். பல தடவைகள் "தந்திரம் தோழர்களே, ராஜ்ய தந்திரம்'' என்ற சொல்லிற்று ஸ்க்வீலர். ராஜ்ய தந்திரம் என்றால் என்னவென்று விலங்குகளுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்பது உண்மைதான்.


எனினும் ஸ்க்வீலர் அப்படி ரகசியக் குரலில், எல்லாம் தெளிவாகி விட்ட மாதிரிப் பேசும்போது அவை என்ன செய்ய முடியும்? புரிந்துவிட்டமாதிரி பேசாதிருந்துவிட்டன. போதாததற்கு அதன் கட்சியை வலியுறுத்த நெப்போலியனின் மூன்று வேட்டை நாய்களும் ஸ்க்வீலர் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு மற்ற விலங்குகளைப் பார்த்து உறுமிக்கொண்டிருந்தன. வேறு கேள்விகள்,




சந்தேகங்களைக் கேட்டு விவாதத்தை வளர்க்காமல், மற்ற விலங்குகள் ஸ்க்வீலர் சொன்ன விளக்கவுரையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்துவிட்டன. அந்த வருஷம் பூராவும் விலங்குகள் எல்லாம் அடிமைகள் போல வேலை செய்தன. ஆனால் வேலை செய்வதிலே ஒரு ஆனந்தம் இருப்பதைக் கண்டன அவை. எந்தத் தியாகமும் செய்யத் தயங்கவில்லை அவை. எப்படிப் பாடுபட வேண்டுமானாலும் பாடுபடத் தயாராகவே இருந்தன. எது செய்தாலும் கடைசியில் தங்களுக்கே அது லாபகரமானதாக இருக்கும் என்று அவற்றிற்கு நம்பிக்கை இருந்தது.

தங்கள் வாழ்நாளில் அது லாபம் தராவிட்டாலும் பிற்கால சந்ததியினருக்கு நிச்சயம் பலன்தரும் என்கிற நம்பிக்கையில் அவை எதையம் கஷ்டப்பட்டுச் செய்யத் தயாராக இருந்தன. தவிரவும் தங்கள் உழைப்பினால் சோம்பேறிகளான மனிதர்கள், திருட்டுப்புத்தியுள்ள மனிதரக்ள் நிச்சயமாக லாபமடையமாட்டார்கள் என்கிற நம்பிக்கையும் அவை-களை வெகுவாக ஊக்கி முன்னேற செய்தது. வசந்தத்திலும் கோடையிலும் அவை வாரத்தில் அறுபது மணிநேரம் வேலை செய்தன, ஆகஸ்ட் மாதத்தில்,

இனிமேல் ஞாயிறன்று மாலை நேரத்திலும் அவை உழைத்தாக வேண்டும் என்று நெப்போலியன் உத்தரவிட்டது. தானாக விருப்பத்துடன் ஏற்றுக்கொண்ட வேலைதான் அது. ஆனாலும் எந்த விலங்காவது அப்படி வேலைசெய்யத் தவறினால், கொடுக்கப்படும் உணவு பாதியாகக் குறைக்கப்படும் என்று நெப்போலியன் சொல்லிற்று. இப்படியெல்லாம் உழைத்தும், பல வேலைகள் செய்யப்படடாமலும் பூர்த்தியாகாமலுந்தான் இருந்தன. முந்திய வருஷத்தைவிட அறுவடை குறைவாகவே இருந்தது. **(நாளை)**




# "பச்சோந்தி'' க் கல்

சரளைக் கல் வீதி ஒன்றில் வேகமாகப் போன வண்டியின் சக்கரம் ஒன்று ஒரு கப்பிக் கல்லை பெயர்த்து உருட்டி விட்டுப் போய்விட்டது. அந்தக் கப்பிக் கல் தனக்குள் சொல்லிக் கொண்டது. "என்னைப் போன்ற மற்றவர்களுடன் பிணைக்கப்பட்டு நான் இப்படி ஒரே இடத்தில் கிடப்பானேன்? நான் தனியாகவே வாழ்ந்து பார்க்கிறேன்!"

தெருவோடு போன ஒரு பையன் அந்தக் கல்லைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். கல் தனக்குள் எண்ணிக் கொண்டது. "நான் பிரயாணம் செய்ய விரும்பினேன். பிரயாணம் செய்கிறேன். தீவிரமாக எதையும் விரும்பினாலே போதும். விரும்பிய படி நடக்கும்!"

கல்லை ஒரு வீட்டை நோக்கி எறிந்தான் பையன். "ஹா! நான் பறக்க விரும்பினேன் பறக்கிறேன். என் விருப்பம் போலத்தான் நடக்கிறது எல்லாம்"

ஒரு ஜன்னல் கண்ணாடியில் "டண்" என்று கல் மோதி உடைத்துக் கொண்டு உள்ளே போனது, கண்ணாடி உடையும் போது அது சொல் லியது "போக்கிரி, நான் போகும் வழியில் விலகிக் கொள்ளாமல் நிற்கிறாயே?! என்னை மறிப்பவர்களை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. என் சௌகரியத்திற்காகத்தான் எல்லாம் இருக்கிறது. ஆகவே இனிமேல் கவனமாக இரு!"

வீட்டின் அறைக்குள் இருந்த ஒரு மெத்தையின் மேல் விழுந்தது கல். "இவ்வளவு நேரம் பிரயாணம் செய்ததில் அலுப்பாகி விட்டது. சற்று ஓய்வு தேவை என்று நினைத்த பட்சத்திலேயே படுக்கை கிடைத்து விட்டதே. ஆஹா!" என்று நினைத்துக் கொண்டது.


அறைக்குள் ஒருவன் வந்தான். படுக்கையில் இருந்த கல்லைத் தூக்கி ஜன்னல் வழியே திரும்பவும் தெருவில் எறிந்து விட்டான்.

அப்போது கப்பிக் கல் தன்னுடன் பதிந்திருந்த ஏனைய கப்பிக் கற்களிடம் "சகோதரர்களே! சௌக்கியமா? நான் இப்போது பெரிய மனிதர்களைப் பார்க்க அவர்கள் மாளிகைக்குப் போய் விட்டுத் திரும்புகிறேன். பெரிய மனிதர்களையும் பணக்காரர்களையும் எனக்குப் பிடிப்பதில்லை. என்னைப் போன்ற சாதாரண மக்களிடம்தான் எனக்கு உண்மையில் ரொம்பப் பிரியமும் மரியாதையும் இருக்கிறது. அதனால்தான் திரும்பி விட்டேன்" என்றது.

சொல்லிக் கொண்டிருக்கும் போதே சரக்கு ஏற்றி வந்த ஒரு வண்டியின் சக்கரம் தனியாகக் கிடந்த கல்லின் மேல் ஏறியது. "வாழ்க்கையில் இதெல லாம் சகஜம்" என்று சொல்லிக் கொண்டே துண்டு துண்டாகச் சிதறிப் போனது அந்தப் பச்சோந்திக் கப்பிக் கல்.

# சிறுவர் அமுதம்

## புவியின் இரசாயன சேர்மானம்



பூமியின் நிறை ஏறக்குறைய 5.981024 கி.கி. ஆகும். பூமி, இரும்பு (32.1%), ஆக் சிஜன் (30.1%), சிலிக் கன் (15.1%), மெக் னியம் (13.9%), சல்பர் (2.9%), நிக்கல் (1.8%), கால்சியம் (1.5%), மற்றும் அலுமி னியம் (1.4%) மீதமுள்ள 1.2% மிகவும் குறைந்த அளவிலுள்ள தனிமங்களால் ஆனது. புவியின் உட்கரு பிரதானமாக இரும்பினாலும் (88.8%) சிறிதளவு நிக்கல் (5.8%) மற்றும் சல்பர் (4.5%) ஆகியவற்றாலும், மேலும் ஒரு வீதம் அரிதான தனிமங்களாலும் ஆகியுள்ளது.

47வீதத்துக்கு சிறிது கூடுதலான பிராணவாயு இருப்பதாகவும் புவியியலாளர்கள் கணக்கிட்டுள்ளனர். பூமியின் மேற்பரப்பில் பரவியிருக்கும் கற்கள் பெரும்பாலும் ஒக்சைடுகளாலேயே ஆனது. மற்ற குளோரின், சல்பர், ப்ளூரின் இவை 1மூ க்குள் அடங்கும். இவற்றில் முதன்மையான ஒக்சைடுகள் சிலிக்கா, அலுமினா, இரும்பு ஆக்சைடு, சுண்ணாம்பு, மெக்னீசியா, பொட்டாசு மற்றும் சோடா ஆகும். சிலிகா அமிலத்தைப் போல் செயல்பட்டு சிலிக்கேட்டுகளை உருவாக்குகின்றது. பெரும் பாலும் தீப்பாறையில் காணப்படும் எல்லா கனிமங்களும் இதைப் போலவே செயல்படுகின்றன. ஏறத்தாழ 1,672 வகையான பாறைகளை ஆராய்ந்து பார்த்ததில் புவியியலாளர் கிளார்க் 11 வகையான ஒக்சைடுகள் 99.22% இருப்பதாக கண்டறிந்துள்ளார். இதர எல்லா தனிமங்களும் மிகவும் சிறிதளவே அடங்கியுள்ளது.

## விடுகதைகள்




**விடுகதைகள்**

1.அரையடிப் புல்லில் ஏறுவான், இறங்குவான். அவன் யார்?

2.அரைப்படி அரிசி பொங்கி, ஆயிரம் பேர் உண்டு. அரைச் சட்டி மிச்சம். அது என்ன?

3.அரைச்சாண் ராணி அவளுக் குள்ளே ஆயிரம் முத்துக்கள். அது என்ன?

4.அம்மா கொடுத்த தட்டிலே தண்ணீர் விட்டால் நிற்கவில்லை. அது என்ன?

5. அம்மான் அகத்துக் கொல் லையிலே பட்டாக்கத்தி தொங் குது. அது என்ன?

**விடைகள்:**
**1.பேன்**
**2.சுண்ணாம்பு**
**3.வெண்டிக்காய்**
**4.தாமரை இலை**
**5.புடலங்காய்**

**சுடோக்கு எண் 47 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 1 | 3 | 4 | 8 | 5 | 2 | 9 |
| 8 | 2 | 5 | 9 | 7 | 6 | 1 | 4 | 3 |
| 9 | 3 | 4 | 1 | 5 | 2 | 6 | 8 | 7 |
| 4 | 5 | 2 | 7 | 6 | 1 | 9 | 3 | 8 |
| 3 | 1 | 9 | 2 | 8 | 4 | 7 | 5 | 6 |
| 7 | 8 | 6 | 5 | 9 | 3 | 4 | 1 | 2 |
| 2 | 4 | 3 | 6 | 1 | 7 | 8 | 9 | 5 |
| 5 | 6 | 8 | 4 | 2 | 9 | 3 | 7 | 1 |
| 1 | 9 | 7 | 8 | 3 | 5 | 2 | 6 | 4 |

**சுடோக்கு எண் 48**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 6 | |
| 3 | | 4 | | 2 | | 1 | | 7 |
| | | 5 | | 4 | | 2 | | |
| 5 | | | | | 1 | | 8 | |
| | 4 | 2 | 7 | | 5 | 3 | 9 | |
| | 3 | | 9 | | | | | 4 |
| | | 8 | | 1 | | 7 | | |
| 4 | | 7 | | 5 | | 9 | | 6 |
| | 6 | | | | | | | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் பாரதி விழா



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாரதி விழா - 2012 நாளை (செவ்வாய்க்கிழமை) நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் முழுநாள் நிகழ்வாக நடைபெறுகிறது.

காலை அமர்வு 9.00 மணிக்கு கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் தலைமையில் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வின்போது யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் தமிழ்மொழி வாழ்த்தும், தமிழ்த் தெய்வ வணக்கமும், தொடர்ந்து சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் லோ. துஷிகரன் வழங்கும் வரவேற்புரையும், சிவஸ்ரீ சோ. இ. பிராணதார்த்திஹரக் குருக்கள் வழங்கும் ஆசியுரையும், "எங்கள் பார்வையில் பாரதி" என்ற பொருளில் மாணவர் அரங்கமும் இடம்பெறும்.

புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் எ. ஜெனால்ட், யாழ் மத்திய கல்லூரி மாணவன் ப. ஜெகநாதன், மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி யோ. கௌதமி ஆகியோர் கலந்துகொள்ளும் அரங்க நிகழ்வு யாழ்ப்பாண தமிழ்ச் சங்க துணைத் தலைவர் சிவ. மகாலிங்கம் நெறியாள்கையில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து "மகாகவி பாரதி" இறுவெட்டு வெளியீடு இடம்பெறும். ச. லலீசன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். க. அருள்நேசன் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக மொழி பண்பாட்டுத்துறை தலைவர் கலாநிதி ரம்ஸ் அப்துல்லா "பாரதியின் பன்முக ஆளுமையும் புனைதிறனும்" என்ற பொருளில் ஆற்றும் சிறப்புரையும், தமிழ்ச் சங்கத்தின் மாணவ அங்கத்தவரிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பேச்சும் இடம்பெறுவதுடன், சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் வழங்கும் நன்றியுரையுடன் காலை நிகழ்வு நிறைவு பெறும்.

காலை நிகழ்ச்சிகளை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் முன்னிலைப்படுத்துவார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை அமர்வின்போது, யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவிகளது தமிழ் மொழி வாழ்த்து, தமிழ்த் தெய்வ வணக்கம், வரவேற்பு நடனம் என்பவைகளைத் தொடர்ந்து சங்க துணைச் செயலர் நாக. தமிழிந்திரன் வழங்கும் வரவேற்புரையும், தொடர்ந்து கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் கனவு மெய்ப்படவில்லை என்ற பொருளில் கவியரங்கமும் இடம்பெறும். த. ஜெயசீலன், கு. றஜீவன், த. நாகேஸ்வரன் ஆகிய கவிஞர்கள் பங்கேற்பார்கள்.

இதனைத் தொடர்ந்து கலாநிதி ஆறு. திருமுருகன் வழங்கும் சிறப்புரையும், "பாரதியின் புலமைத்துவம்" நூல் வெளியீடும், யாழ் நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் "பஞ்சாலி சபதம்" இசை நாடகமும் இடம்பெறுவதுடன், சங்கத்தின் பொதுச் செயலர் இரா. செல்வவடிவேல் வழங்கும் நன்றியுரையுடன் மாலை அமர்வு நிறைவுபெறும். மாலை நிகழ்ச்சிகளை பேராசிரியர் தி. வேல்நம்பி முன்னிலைப் படுத்துவார்.

# தமிழ்நாட்டில் இலங்கையருக்கு எதிராக 20 தாக்குதல் சம்பவங்கள்

தமிழகத்துக்கு இலங்கையரை செல்ல வேண்டாம் என்று அரசாங்கம் விடுத்த ஆலோசனையை நீக்குமாறு தமிழ்நாடு வர்த்தக மற்றும் தொழில்துறை அமைப்பு விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் நேற்று நிராகரித்தது. இவ்வருட ஆரம்பத்திலிருந்தே இது வரை இலங்கையரை இலக்கு வைத்து தமிழ்நாட்டில் இருபதுக்கு மேற்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆகவே இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு செல்பவர்களையும் அவர்களின் உடைமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கிறது என்று வெளிவிவகார அமைச்சின் காரியதரிசி கருணாதிலக அமுனுகம தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் நிலைமைகளை இலங்கை அரசாங்கம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. நிலைமை சீரடைந்ததும் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்வதை தடுக்கும் வகையில் முன்வைக்கப்பட்டிருக்கும் ஆலோசனை நீக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

# ஈழத்துக் குறும்பட விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் ஈழத்து குறும்பட விழா ஒன்றை செப்டம்பர் மாத இறுதியில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

2010ஆம் ஆண்டுக்குப் பின் ஈழத்தில் தயாரிக்கப்பட்ட தமிழ் குறும்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இந்த திரைப்பட விழா இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது. காலை 9.00மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ள இந்த விழாவில் குறும்படங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள், கருத்துப் பகிர்வுகள், குறும்படங்கள் திரையிடல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொண்டு (இலக்கம் 021 2229873) பதிவுகளை மேற்கொள்ளலாம்.

# சிங்களத் தாதி மீதான தாக்குதல் மேலும் பலர் வெளியேற முஸ்தீபு

யாழ் ஆஸ்பத்திரியில் சிங்கள தாதியர்கள் தங்கியிருந்த விடுதியில் கடந்த வெள்ளி நள்ளிரவு இனந்தெரியாத நபர்கள் உட்புகுந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அதிகாலை 1.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆனைப்பந்தியில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைத் தாதியர் விடுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ் விடுதியில் 20 சிங்கள தாதியர்கள் தங்கியிருந்துள்ளனர்.

ஆனைப்பந்தியில் சிங்கள தாதியர் விடுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து யாழ். போதனா வைத்தியசாலை தாதியர்கள் அனைவரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

26 வயதுடைய குருநாகலைச் சேர்ந்த பெண் தாதியான ஈ.ஏ. ஆர்.பெர்ணான்டோ என்பவரே கையில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தமக்கு பாதுகாப்பான இடத்தில் விடுதியை ஏற்படுத்தித் தருமாறும் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்த சட்டத்தில் நிறுத்துமாறும் கோரி இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள அனைத்து தாதியர்களும் தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கணவனை இழந்தவர்கள் பதிவு செய்து கொள்ளலாம்

உடுவில்

தெல்லிப்பழை கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள கணவனால் கைவிடப்பட்டேன், கணவனை இழந்தோர் மற்றும் கணவன் காணாமல் போன பெண்கள் தமது விபரங்களைப் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.227 தெல்லிப்பழை கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள கணவனால் கைவிடப்பட்ட, கணவனை இழந்த மற்றும் கணவன் காணாமல்போன பெண்கள் தமது விபரங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் கிராம அலவலர் பணிமனையில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று நினைவுப் பேருரையும் மலர் வெளியீடும்

மருதனார்மடம்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுனர் மழவராயரின் நினைவுதின நிகழ்வும், வருடாந்த பரிசளிப்பு விழாவும் இன்று (திங்கட்கிழமை) காலை 9.00 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறுகிறது.

யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கல்லூரியின் பழைய மாணவனும், ஆசிரியருமான க. துஸ்யந்தன் நினைவுப் பேருரையாற்றுவார்.

மாலை நிகழ்வின்போது 'சோமஸ்கந்தன்' கல்லூரி மலரும், ஆசிரிய ஆலோசகர் செ. விஸ்வலிங்கம் எழுதிய "புத்தூர் பிரதேச கல்வி மேம்பாட்டில் மழவராயரின் பங்கு" என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்படும்.

இந்நிகழ்வில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலர் ம. பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கல்லூரி மலரின் முதற் பிரதியை கு. ஜெயந்தன் பெற்றுக்கொள்வதுடன் யாழ் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. குணாளன் மலரின் ஆய்வுரையை வழங்குவார்.

"புத்தூர் பிரதேச கல்வி மேம்பாட்டில் மழவராயரின் பங்கு" என்ற நூலின் முதற் பிரதியை முன்னாள் அதிபர் வே. சந்திரசேகரம் பிள்ளை பெற்றுக்கொள்வார். மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்பார்வையாளர் த. சண்முகநாதன் ஆய்வுரையை வழங்குவார். (01)

## மேட்டுநிலப் பயிர்ச் செய்கையிலீடுபடும் விவசாயிகளுக்கு

உடுவில்

தெல்லிப்பழை துர்க்காபுரம் கிராமத்தில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தமது காணிகளின் விபரத்தினைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. துர்க்காபுரம் விவசாயிகள் சம்மேளத்தினால் தமது பிரிவில் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் செய்கையில் ஈடுபடும் காணியின் அளவு மற்றும் பயிர்கள் தொடர்பான விபரத்தினைப் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

## குப்பிளானில் டெங்கு ஒழிப்புப் பணி

உடுவில்

குப்பிளான் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஈடுபட்டுள்ளார். இப் பகுதியில் உள்ள இடங்களில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய சூழல் இனம் காணப்பட்டு துப்பரவு செய்யுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை விடுத்து வருகின்றார். பொதுஇடங்கள் மற்றும் தனி யார் காணிகள் என்பனவும் துப் பரவு செய்யப்பட்டு நீர் தேங்கி நிற்காத வகையில் சூழலைப் பராமரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# வன்னி எருவுக்கு வலிகாமத்தில் கிராக்கி

உடுவில்

வன்னி எருவுக்கு வலிகாமத்தில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. வன்னியிலிருந்து பாரவூர்திகள் மூலம் கொண்டு வரப்படும் மாட்டு எருவுக்கு வலிகாமம் பகுதி விவசாயிகள் நல்ல விலை கொடுத்து வாங்கி வருகிறார்கள்.

வலிகாமம் பகுதி விவசாயிகள் தமது பயிர்களில் இருந்து விளைச்சலினை அதிகரிக்குமுகமாக இயற்கைப் பசளையான எருவினைக் கொள்வனவு செய்து பயன்படுத்துவதில் முன்னிற்கிறார்கள்.

# திறைசேரி உண்டியல்



ஸ்ரீலங்கா மத்திய வங்கி 13ஆயிரம் மில்லியன் பெறுமதியான இலங்கை ரூபா உண்டியல்களை இந்த வருடம் செப்டம்பர் 5ஆம் திகதி ஏலத்தில் விட்டது. இது மாதிரியான உண்டியல்களை உலகிலுள்ள எல்லா நாடுகளும் அவ்வப்போது தங்களுக்கு நிதித்' தேவை ஏற்படும்பொழுது ஏலத்தில் விடுவது ஒரு வழக்கமான நிகழ்வாகும்.

மேற்கூறப்பட்ட ஏலத்தில் 4ஆயிரம் மில்லியனின் முதிர்ச்சிக் காலம் 91 நாட்களும், இரண்டாவதாக இன்னுமொரு 4ஆயிரம் மில்லியன் ரூபாய் 182 நாட்களில் முதிர்ச்சி பெறும். மூன்றாவதாக 5ஆயிரம் மில்லியன் ரூபாய் 364 நாட்களில் முதிர்ச்சி பெறும். இதில் ஒருவர் பெறும் வட்டி வருமான வரிக்கு கணக்கிடப்பட மாட்டாது. வட்டித் தொகையைக் கழித்தே எல்லோரும் பணத்தைச் செலுத்துவர்.

இந்த வட்டி விகிதம் சாதாரண வங்கி வட்டி விகிதத்தை விட சற்றுக் கூட இருக்கும்.

இந்த முறை இந்த ஏலத்தில் பங்கேற்கும் உரிமை மூன்று அரச வங்கிகளுக்கும் மூன்று தனியார் வங்கிகளுக்கும் ஆறு தனியார் பதியப்பட்ட கம்பனிகளுக்கும் கிடைத்துள்ளன. இவற்றை வாங்க விரும்புபவர்கள் இந்த நிறுவனங்களை தொடர்பு கொண்டு வாங்கலாம்.

அதற்குரிய பத்திரங்கள் அந்தந்த நிறுவனங்களே பாதுகாப்பு காரணங்களுக்காக வைத்துக்கொண்டு தங்களுடைய பற்றுச்சீட்டை வழங்குவார்கள்.

இவற்றின் பெறுமதி தனித்தனியாக ரூபா பத்தாயிரத்தில் இருந்து ஒரு மில்லியன் வரை இருக்கும்.

அமெரிக்க மத்திய வங்கியின் திறைசேரி உண்டியலை அதிக அளவு கொள்வனவு செய்த நாடாக சீனா திகழ்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இது மாதிரி சீனா உதவி செய்கிறது. அமெரிக்க பங்குச் சந்தையில் அதிக அளவு முதலீடு செய்த நாடாக சீனா திகழ்கிறது. அதிக அளவு வெளிநாட்டு நாணயத்தை வைத்திருக்கும் நாடாக சீனா திகழ்கிறது.

*சி.குமாரலிங்கம்*

# சீனாவில் நிலநடுக்கம்: பலி எண்ணிக்கை 80 ஆக உயர்வு



சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பலியானோரின் எண்ணிக்கை 80ஆக உயர்ந்துள்ளது, 700க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள யுனான், குய்சூ மாகாணங்களில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது.

லூசிகி நகரில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இதையடுத்து 16 முறை தொடர்ந்து நில அதிர்வு ஏற்பட்டதால் மக்கள் பீதி அடைந்தனர்.

கட்டிடங்கள் நொறுங்கியதில் இறந்தவர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது. 700க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்


பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் மீட்புப் படையினரால் நிவாரண பணிகளை வேகமாக செய்ய முடியவில்லை. இடிபாடுகளில் சிக்கி மேலும் பலர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நிலநடுக்கத்தால் பல இடங்களில் மின்சாரம், தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் 7 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் நொங்கி உள் ளன. சாலைகளும் துண்டிக்கப் பட்டுள்ளன.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து 2வது நாளாக மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன.

# உலக பார்வை

## மகளின் குழந்தையை பெற்றெடுத்த தாய்



சிகாகோவில் செயற்கை கருத்தரிப்பு முறை மூலம் தாய் ஒருவர், தனது மகளின் குழந்தையை பெற்றெடுத்துள்ளார்.சிகாகோவைச் சேர்ந்தவர் சின்டி ரூட்ஜெல் (வயது 53). அவரது மகள் எமிலி ஜோர்டான்(வயது - 29), மருமகன் மைக்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு எமிலி கர்ப்பமானார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவரது கர்பப்பையின் வாயில் புற்றுநோய் இருப்பதை கண்டறிந்தனர். இதையடுத்து கருவை கலைத்ததுடன் எமிலியின் கருக்குழாய் அகற்றப் பட்டது.

குழந்தைக்காக ஏங்கிய எமிலிக்கு சிகாகோ மருத்துவமனை நம்பிக்கை அளித்தது. செயற்கை கருத்தரிப்பு மூலம் எமிலியின் கருமுட்டையை மைக்கின் விந்தணுவுடன் சேர்ந்து அதை எமிலியின் தாய் சின்டியின் கருப்பையில் ஏற்றினர். சின்டி இந்த வாரம் தான் அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்தார். அதற்கு எல்லி என்று பெயர் வைத்துள்ளனர்.


இது குறித்து சின்டி கூறுகையில், எமிலிக்கு குழந்தை பிறக்காது என்பதை கேள்விப்பட்டு மனமுடைந்து விட்டேன். அதன் பிறகு செயற்கை கருத்தரிப்பு மூலம் நான் என் மகளுக்கு எனது பேத்தியைப் பெற்றெடுத் துக் கொடுத்தது மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.



அமெரிக்காவில் அதிபர் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. ஜனநாயகக் கட்சியில் போட்டியிடும் அதிபர் ஒபாமா, சார்லட்நகரில் நடந்த அக்கட்சி மாநாட்டில் பேசுவதை அவரது மனைவி மிச்சேல் மற்றும் மகள் சாஷா ஆகியோர் கைதட்டி ரசிக்கின்றனர்.

# மைனஸ் டிகிரி குளிரிலும் உருகும் பனிப்பாறைகள்:

- ஆராய்ச்சியாளர்கள் கவலை



பூமியின் வடகோடியில் உள்ள ஆர்டிக் பிரதேசம் முழுவதும் பனிப்பாறைகளால் ஆனது.

பூமியின் வெப்பநிலை சமீபகாலமாக அதிகரித்து காணப்படுகிறது. ஆனால் மைனஸ் டிகிரியில் குளிர் இருந்தும், இந்த வருடம் பனிப்பாறைகள் வெகு வேகமாக உருகி வருவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த இருபது வருடங்களில் இல்லாத வகையில், கடலில் மிதக்கும் இந்த பனிப்பாறைகள் உருகி மெலிந்து வருவது ஐரோப்பாவின் காலநிலையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

உருகிய பனிப்பாறைகள் ஸ்வல்பர்ட் மற்றும் கிரீன்லாந்து வழியாக ஆர்டிக் பிரதேசத்தை விட்டு வெளியே செல்லும்போது அதை ஆராய உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்த ஒரு புரிந்துணர்வுக்கு நாம் வரவேண்டும் என்று நோர்வே ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். சூரியனிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் இப்பனிப்பாறைகள் மீது பட்டு மீண்டும் எதிரொளிப்பதால், அவை மீண்டும் மேலே ஆகாயத்திற்கு அனுப்பப்பட்டன.

ஆனால் பனிப்பாறைகள் உருகி இப்பிரதேசத்தை விட்டு விலகிச் செல்வதால், நேரடியாக வெப்பத்தை உறிஞ்சி மேலும் பிரச்சினையை உருவாக்கும் என்றும் கூறப்படுகிறது.

## ஹக்கானி இயக்கம் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது : பென்டகன்

பாகிஸ்தானை சேர்ந்த ஹக்கானி இயக்கம் அமெரிக்க பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று அமெரிக்க பாதுகாப்பு துறையின் தலைமை அலுவலகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

இது பற்றி பென்டகன் ஊடகச் செயலாளர் ஜார்ஜ் லிட்டில் கூறுகையில், பாகிஸ்தானைச் சேர்ந்த ஹக்கானி இயக்கம் அமெரிக்க பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

இந்த இயக்கத்துக்கு எதிராக அமெரிக்கா தொடர்ந்து இராணுவ தாக்குதல் நடத்தும். இந்த புதிய இயக்கத்தின் தொடர்புகள் மற்றும் தாக்குதல்களை தடுக்க உளவு அமைப்புகளின் செயல்பாடுகளை பலப்படுத்துவோம்.

அந்த இயக்கத்துக்கு வந்துசேரும் நிதியை தடுப்பதற்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும். பாகிஸ்தானிடம் அந்த இயக்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

ஹக்கானி அமைப்புக்கு எதிரான அரசின் வலுவான நடவடிக்கையால், ஆப்கனிஸ்தானில் நமது இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்களையும், அப்பகுதியில் இது போன்ற இயக்கங்களின் செயல்பாட்டையும் தடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

# மாபெரும் புயலை சந்திக்க உள்ளது உலகப் பொருளாதாரம்

உலகப் பொருளாதாரம் ஒரு மாபெரும் புயலை சந்திக்கவுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இத்தாலியின் கோமோ ஏரியின் அருகே உள்ள செர்னோபியோ நகரில் ஆண்டுதோறும் உலகப் பொருளாதார நிபுணர்கள் கூடி விவாதிப்பது வழக்கம்.

Ambrosetti Forum என்று அழைக்கப்படும் இந்த மாநாட்டில் உலகத் தலைவர்களும், சர்வதேச நிதி விவகாரங்களில் முக்கிய பங்கு வகிக்கும் நிபுணர்கள் கலந்து கொள்வர். இந்த ஆண்டுக்கான கூட்டம் நேற்று தொடங்கியது.

இதில் பேசிய பெரும்பாலான சர்வதேச நிபுணர்களும், உலகம் ஒரு மாபெரும் பொருளாதாரப் புயலை சந்திக்கப் போவதாக எச்சரித்துள்ளனர்.

ஐரோப்பாவில் நிலவும் பொருளாதார தேக்கம் தொடரப் போகிறது, அமெரிக்க பொருளாதாரத்தை அந் நாட்டு அரசியல் போட்டி கீழே தள்ளிவிடப் போகிறது, இந்தியா, சீனா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைய ஆரம்பித்துவிட்டது, இத்தோடு ஈரானின் அணு ஆயுத விவகாரத்தால் நிலவும் ஆபத்தான சூழல்.. இவை அனைத்தும் சேர்ந்து உலகை ஒரு புரட்டு புரட்டி போடப் போகின்றன என்றனர் இந்த மாநாட்டில் பேசிய பல நிபுணர்களும்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் அதிகரித்து வரும் கடன் சுமையும் அந் நாடுகளின் அரசியல் நிலவரமும் உலகை வாட்டும் முக்கியமான கவலைக்குரிய விஷயங்கள் என்று கூறும் நிபுணர்கள், இதனால் யூரோ நாணயத்தின் மதிப்பு அதிவேகமாக சரிந்து வருவதையும் சுட்டிக் காட்டினர்.

இந் நிலையில் உலகின் பணக்கார நாடுகளின் கூட்டமைப்பு என்று அழைக்கப்படும் OECD(Organisation for Economic Co-operation and Development) அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச பொருளாதார வளர்ச்சி சரிய ஆரம்பித்துவிட்டது.

அடுத்த சில காலத்துக்கு உலகின் டாப் 7 பணக்கார நாடுகளின் வளர்ச்சி விகிதம் வெறும் 0.3 சதவீதமாகத் தான் இருக்கும் (கிட்டத்தட்ட பூஜ்யம்!). இதனால் சர்வதேச அளவில் முதலீடுகளும் வர்த்தகமும் ஸ்தம்பிக்கும்.

இதன் எதிரொலியாக வேலை வாய்ப்புகளும் குறையும் என்று கூறப்பட்டுள்ளது.

## நீல் ஆம்ஸ்ட்ராங் உடல் 13ம்திகதி கடலில் தகனம்



நிலாவில் முதன்முதலாக கால் பதித்த சாதனை மனிதர் நீல் ஆம்ஸ்ட்ராங், அமெரிக்காவில் ஓஹியோ பகுதியில் உள்ள சின் சின்னாட்டி என்ற இடத்தில் வசித்து வந்தார்.

அவர் 82 வயதில் இதய நோயால் கடந்த 26ந் தேதி இறந்தார். வாஷிங்டன் நகரில் உள்ள தேசிய கதீட்ரல் தேவாலயத்தில் வரும் 13ந் திகதி நடக்கிற சிறப்பு பிரார்த்தனையை தொடர்ந்து ஆம்ஸ்ட் ராங்க் உடல், கடலில் அடக்கம் செய்யப்படும் என அவரது குடும் பத்தின் செய்திதொடர்பாளர் ரிக் மில்லர் நேற்று அறிவித்தார்.

ஆம்ஸ்ட்ராங்க் உடல் அடக்கம், நாசா டெலிவிஷனில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

# இந்திய செய்திகள்

## விண்ணில் பாய்ந்தது இந்தியாவின் 100வது ரொக்கெட்

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ, தனது 100வது ரொக்கெட்டை விண்வெளிக்கு அனுப்பியது.

கல்வி, காலநிலை, ஒளிபரப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகளுக்காக செயற்கைக் கோள்களை இஸ்ரோ விண வெளிக்கு அனுப்பி வருகின்றது.

இது வரை 62 செயற்கைக் கோள்களையும் 37 ரொக்கெட் களையும் இஸ்ரோ விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

இந்நிலையில் நேற்று காலை 9.51 மணிக்கு பி.எஸ்.எல்.வி. சி- 21 என்ற ரொக்கெட்டை விண்ணுக்கு அனுப்பியது.

விண்வெளித்துறையில் இந்தியாவுக்கு போட்டியாக விளங்கும் பிரான்ஸ் நாட்டின் ஸ்பாட்-6 மற்றும் ஜப்பானின் ப்ரோயிடர்ஸ் என்ற இரண்டு செயற்கைக் கோள்களை இந்த ரொக்கெட் சுமந்து செல்கிறது.

சென்னையிலிருந்து 110 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீஹரி கோட்டா ஏவுதளத்தில் இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த



இந்த நிகழ்வை பிரதமர் மன்மோகன் சிங் நேரில் பார்வையிட்டார்.

## இணைய தளங்களில் புதுப்படத்தை பதிவேற்றம் செய்த 16 பேர் கைது

இணைய தளங்களில் புதுப் படங்களை பதிவேற்றம் செய்த 16 பேரை கேரள பொலிஸார் கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளனர்.

கடந்த சில வருடங்களாக புதிதாக திரைக்கு வரும் திரைப்படங்கள் உடனுக்குடன் இணைய தளங்களில் வெளியாகின்றன.

திருட்டு சிடி வாங்கி பார்ப்பதை விட, இணைய தளங்களில் புதிய படத்தை எளிதாக பார்த்து விடுகின்றனர்.

இதனால் பெரும் நஷ்டம் ஏற்படுவதாக திரைப்பட தயாரிப்பாளர்கள் புகார் கூறி வருகின்றனர்.

ஆனால் புதிய படங்களை இணைய தளங்களில் வெளியிடுபவர்கள் யார்? படத்தை பார்ப்பவர்கள் யார்? என்று கண்டுபிடிக்க முடியாத நிலை இருந்தது.

இந்நிலையில், கொச்சியை சேர்ந்த ஒரு மென்பொருள் நிறுவனம், ஜாது என்ற புதிய கணணி தொழில்நுட்பத்தை கண்டுபிடித்துள்ளது.

இதன் மூலம் திரைப்படங்களை இணையதளங்களில் பதிவேற்றும் செய்பவர்களையும் படம் பார்ப்பவர்களையும் எளிதில் கண்டுபிடித்து விடலாம்.

கேரளாவில் சமீபத்தில் வெளியான பேச்சிலர் பார்ட்டி என்ற மலையாள படத்தை இணைய தளங்களில் பதிவேற்றம் செய்த 16 பேரை இந்த தொழில்நுட்பத்தின் மூலம் திருவனந்தபுரம் திருட்டு வீடியோ தடுப்பு பிரிவு பொலிஸார் கண்டுபிடித்து வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

புனேயை சேர்ந்த பொறியியல் கல்லூரி மாணவர் ஒருவர் இந்த படத்தை இன்டர்நெட்டில் வெளியிட்டுள்ளார்.

அவருடைய செல்போன் எண்ணை கண்டுபிடித்து பொலிஸார் விசாரித்தபோது தனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று மறுத்தார்.

அவரது பெற்றோரிடம் விசாரித்தபோது, படத்தை பதிவேற்றம் செய்தது மாணவர்தான் என்பது உறுதியானது.

இதையடுத்து மாணவர் மீதும் அவருக்கு உடந்தையாக இருந்த 15 பேர் மீதும் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பான முதல் தகவலறிக்கை(எப்ஐஆர்) திருவனந்தபுரம் மாவட்ட குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மேலும், இந்த படத்தை இன்டர்நெட்டில் பார்த்த ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

## இந்தியர்களுக்கான விசா நடைமுறைகளை தளர்த்தியது பாகிஸ்தான்


இந்தியா- பாகிஸ்தான் இடையே விசா வழங்கும் விதிமுறைகளில் சலுகை அளிக்கும் வகையில் தாராளமய விசா ஒப்பந்தத்தம் நேற்று கையெழுத்தானது.

பாகிஸ்தானில் 3 நாட்களாக சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளி விவகாரத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

கடந்த 38 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள விசா விதிமுறைகள் மிகவும் கடுமையானதாக இருந்தன.

இந்த விதிமுறைகளில் தளர்வு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததையடுத்து, இப்போது புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

சலுகைகள்: புதிய விசா ஒப்பந்தத்தில், இந்தியா - பாகிஸ்தான் இடையே குழுவாக வருவோருக்கு ஆன்மிக பயண விசா, வர்த்தகர்களுக்கான தனி விசா என்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



65 வயதை கடந்த மூத்த குடிமக்கள் இந்தியா அல்லது பாகிஸ்தானை சென்றடைந்த பின்னர் வாகா அல்லது அட்டாரி எல்லைப் பகுதியில் விசா பெற்றுக் கொள்ளலாம்.

விசா வழங்குவதற்கான கால வரம்பு எதுவும் முடிவு செய்யப்படா விட்டாலும் விண்ணப்பித்த 45 நாட்களுக்குள் விசா கிடைக்க வகை செய்யப்படும்.

நிபந்தனை தளர்வு: புதிய ஒப்பந்தப்படி இரு நாட்டவர்களுக்கும் 5 இடங்களுக்கு செல்லும் வகையில் விசா தரப்படும். இதற்கு முன்பு 3 இடங்களுக்கு மட்டுமே செல்லமுடியும்.

பிரபல தொழிலதிபர்கள், 65 வயதை கடந்தோர், 12 வயதுக்கு உட்பட்டோர், பொலிஸிடம் தகவல் தெரிவிக்க வேண்டிய அவசியம் இனி இருக்காது.


சொந்தக்காரர்களை சந்திக்க செல்வோருக்கான விசா ஒரு முறை பதிவு என்ற வகையில் 6 மாதத்துக்கு வழங்கப்படும்.

5 இடங்களுக்கு செல்ல பயன்படுத்தலாம். ஒரு இடத்தில் 3 மாதத்துக்கு மேல், இருக்கக் கூடாது.

இதன்பின் நிருபர்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கூறியதாவது: அமைதிக்கு அச்சுறுத்தலாக உள்ள, பயங்கரவாதத்தை இரு நாடுகளும் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவது என உறுதி மேற்கொண்டுள்ளன.

மும்பை தாக்குதல் பயங்கரவாதிகளை நீதியின் முன் நிறுத்துவோம் என பாகிஸ்தான் தரப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

சரியான சூழல் உருவானால் பிரதமர் மன்மோகன்சிங் பாகிஸ்தான் வருவார் என கூறினார்.





சென்னை ஐகோர்ட்டின் 150வது ஆண்டு நிறைவு விழாவில் ஜனாதிபதி பிரணாப்பும், ஜெ.,யும் மகிழ்ச்சியுடன் உரையாடினர்.

## தலித் சமூகத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு மொட்டை அடித்த கொடுமை

ஒடிசா மாநிலத்தில் தலித் சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை மொட்டையடித்து கொடுமைப் படுத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசா, சம்பல்பூர் மாவட்ட, தமா பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர், ஜார்ஜ் ஜி பரியா இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தங்கள் பொலிஸ் நிலைய எல்லைக்கு உட்பட்ட, கிராமம் ஜயகாந்தா. இங்கு வசித்து வந்த தலித் சமூகத்தை சேர்ந்த சுபிதா புதா 45, என்ற பெண்ணின் மகளும், அதே கிராமத்தை சேர்ந்த சுதம் மகந்தா என்ற இளைஞரும் காதலித்தனர்.

இவர்கள் இருவரும் ஓகஸ்ட் மாதம் திடீரென ஊரை விட்டு வெளியேறினர்.

சில நாட்களிலேயே சுதம் மகந்தாவுக்கு நோய் ஏற்பட்டதையடுத்து மீண்டும் கிராமத்துக்கு திரும்ப முயற்சித்தார். அப்போது வரும் வழியிலேயே சுதம் மகந்தா உயிரிழந்தார்.இந்த விவகாரம் ஜயகாந்தா கிராமத்தில் பெரும் மோதலை ஏற்படுத்தியது.

சுதம் மகந்தா இறப்புக்கு சுபிதா புதாவும் அவரது குடும்பத்தினருமே காரணம் என அந்த இளைஞரின் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அவர்களது குடும்பத்தை ஊரை விட்டு வெளியேற்றினர்.

இதனால் சுபிதா புதா குடும்பத்தினர் அருகில் உள்ள கிராமத்தில் தங்கள் உறவினர் வீட்டில் வசித்து வந்தனர்.

இந்நிலையில் வீட்டில் உள்ள பொருட்களை எடுப்பதற்காக சுபிதா புதா சமீபத்தில் கிராமத்துக்கு வந்தார்.

அப்போது அங்கு ஏராளமானோர் திரண்டு அவரை சரமாரியாக அடித்து உதைத்தனர். அவரது தலையையும் மொட்டை அடித்தனர்.

இது தொடர்பாக புகார் அளிக்கப்பட்டதை அடுத்து அந்த கிராமத்தை சேர்ந்த 10 பேரை கைது செய்துள்ளோம். மேலும் பலரை தேடி வருகிறோம்.

இரு தரப்பினரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் எஸ்.சி., எஸ்.டி., சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யவில்லை என ஜார்ஜ் ஜி பரியா கூறினார்.

## தீவிரவாதிகள் கடல் வழியாக ஊடுருவ முயற்சி: பிரதமர்

இந்தியாவிற்குள் கடல் வழியாக தீவிரவாதிகள் நுழைய முயற்சித்து வருவதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் முதன் முறையாக வாய் திறந்து எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜம்மு- காஷ்மீர் வழியாக தற்போது தீவிரவாதிகளின் ஊடுறுவல் முயற்சிகள் அதிகரித்து விட்டதாகவும், இது தொடர்பாக உள்கட்டமைப்பு பாதுகாப்பு சில இடங்களில் நலிவுற்றிருப்பதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நாட்டில் கலவரங்களை ஏற்படுத்துவதற்கு தீவிரவாதிகள் முயற்சிப்பதாகவும் இதன் காரணமாக இணைய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் புதிய கட்டமைப்பு



ஒன்றை மத்திய அரசு உருவாக்குவதற்கு கவனம் செலுத்தி வருவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

ஏற்கனவே 2008 நவம்பர் மாதம் நடந்த மும்பை தாக்குதல் சம்பவம் கடல் வழியாக தீவிரவாதிகள் ஊடுறுவியே நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## குறைவாக சாப்பிட்டால் டெங்கு காய்ச்சல் வருமாம்

உணவுக் கட்டுப்பாடு என்ற பெயரில், குறைவாக சாப்பிடுவதால், டெங்கு போன்ற நோய்கள் தாக்கக் கூடும் என, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில், டெங்கு காய்ச்சலால் பாதித்து வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதுவரை, 600க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில், நேற்று, கோல்கட்டாவில், நிருபர்களிடம் பேசிய முதல்வர் மம்தா பானர்ஜி கூறியதாவது: உணவுக் கட்டுப்பாடு என்ற பெயரில், குறைவாக சாப்பிடுவதால், நம் உடலில், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, டெங்கு போன்ற நோய்கள் தாக்கலாம். எனவே, ஒவ்வொருவரும், போதிய அளவிற்கு உணவு மற்றும் தண்ணீர் ஆகியவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாரடைப்பால் ஏற்படும் மரணத்தைக் கூட, டெங்கு காய்ச் சலால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டதாக, சில மருத்துவர்கள் சான்றளிக்கிறார்கள்.

இது, தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறு மம்தா கூறினார்.

# முரளிதரன் வெற்றிக் கிண்ணம், பாடசாலை மட்டத்திலான இருபது - 20 போட்டி...





சர்வதேச கிரிட்கட் சபையின் அனுசரணையில், போட்டிகள் கடந்த 8ஆம் திகதி யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பமானது. இலங்கையின் சிறந்த கிரிக்கட் வீரர்களான லசித் மலிங்க, ஏஞ்சலோ மத்யூஸ், நுவன் குலசேகரா, தினேஷ் சந்திமல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.
08.09.2012 அன்று நடைபெற்ற முதல் போட்டி யாழ்ப்பாண பத்திரிசியார் அணிக்கும் கொழும்பு ரியுனிற்றி அணிக்கும் இடையில் இடம்பெற்றது. இதில் 4 விக்கெட்டுகளால் யாழ் அணி வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி கண்டி திருத்துவ கல்லூரி அணிக்கும் மன்னார்-வவுனியா இணைப்பு அணிக்கும் இடையில் இடம்பெற்றது. இதில் மன்னார்-வவுனியா இணைப்பு இறுதி ஓவரில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. .இப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி ஒட்டிசுட்டானில் 12.09.2012 இல் நடைபெறவுள்ளது.
படங்கள் : டொன்பொஸ்கோ ஜீவகன்

## பாராலிம்பிக்: கடைசி போட்டியில் தங்கம் வென்ற பிஸ்டோரியஸ்

பாராலிம்பிக் தடகளத்தின் கடைசிப் போட்டியில் பிளேடு ரன்னர் என்றழைக்கப்படும் ஒஸ்கர் பிஸ்டோரியஸ் தங்கப் பதக்கத்தை வென்றார். மாற்றுத் திறனாளிகளுக்கான பாராலிம்பிக் போட்டி பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இந்த பாராலிம்பிக் தடகளப் போட்டியில் அதிகம் எதிர்பார்க்கப்பட்டவர் தென் ஆப்ரிக்காவின் ஒஸ்கர் பிஸ்டோரியஸ். ஆனால் இவர் கலந்து கொண்ட 200 மீற்றர் தடகளப் போட்டியில் யாரும் எதிர்பாராத விதமாக பிரேசிலின் ஆலிவர் முதலிடத்தை பிடித்து தங்கம் வென்றார். பிஸ்டோரியஸ் இரண்டாவதாக வந்து வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

இதனையடுத்து ஆலிவர் குறித்து பிஸ்டோரியஸ் சில கருத்துகளை கூறி பின்னர் அதற்கு மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

அதன் பின்னர் கடந்த 5ம் திகதியன்று நடைபெற்ற 4 x 100 மீற்றர் தொடர் ஓட்டத் தில் பிஸ்டோரியஸ் அணியான தென் ஆப்ரிக்க அணி தங்கப் பதக்கத்தை வென் றது. இந்நிலையில் தடகளப் போட்டியின் கடைசிப் போட்டியான 400 மீற்றர் ஓட் டப் பந்தயம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட பிஸ் டோரியஸ் அதிரடியாக ஓடி 46.68 வினாடியில் முதலிடத்தை பிடித்து பாராலிம்பிக் சாதனையுடன் தங் கப்பதக்கத்தை வென்றார்.



## இலங்கையில் சிறப்பாகச் செயற்பட முடியும்

\- ஸ்ருவேர்ட் ப்ரோட்



தென்னாபிரிக்காவிற்கு எதிரான நேற்றைய 20- ரூவெண்டி போட்டியில் இங்கிலாந்து அணி தடுமாறிய போதிலும், இலங்கையில் வைத்து அவ்வணியால் சிறப்பாகச் செயற்பட முடியும் என இங்கிலாந்து 20-ருவெண்டி சர்வதேச அணியின் தலைவர் ஸ்ருவேர்ட் ப்ரோட் தெரிவித்துள்ளார். நேற்றைய போட்டியில் இங்கிலாந்து அணி சுழற்பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ளத் தடுமாறியிருந்தது.

றொபின் பீற்றர்சன், ஜொஹன் போத்தா ஆகியோர்களை எதிர்கொள்ளச் சிரமப்பட்ட இங்கிலாந்து அணி, விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது. எனினும் இங்கிலாந்து அணியில் சுழற்பந்து வீச்சாளர்களைச் சிறப்பாக எதிர்கொள்ளக்கூடிய வீரர்கள் காணப்படுகிறார்கள் எனத் தெரிவித்த ஸ்ருவேர்ட் ப்ரோட், இலங்கையில் வைத்து உலக டுவெண்டி டுவெண்டி தொடரில் தங்களால் சிறப்பாகச் செயற்பட முடியும் என தெரிவித்தார்.

ஒய்ன் மோர்கன் சுழற்பந்து வீச்சாளர்களை ஆக்கிரமித்து ஆடக்கூடிய ஒரு வீரர் எனத் தெரிவித்த ஸ்ருவேர்ட் ப்ரோட், கடந்த காலங்களில் அவர் சிறப்பாக சுழற்பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டதைக் கண்டிருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இளைய வீரரான ஜொஸ் பட்லரும் சுழற்பந்து வீச்சை அதிரடியாக ஆடக்கூடியவர் என ஸ்ருவேர்ட் ப்ரோட் தெரிவித்தார்.

## இளைஞர் அணித் தலைவர் உன்முக்த் சந்த்தை கபில்தேவும் அசாருதீனும் கண்டித்தனர்

நியூசிலாந்து சென்று கிரிக்கெட் போட்டிகளில் விளையாட உள்ள இந்திய ஏ அணி வீரர்களுக்கு டெல்லியில் பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது. ஆனால், இதில் விளையாட வேண்டிய இளைஞர் அணி அணித்தலைவர் உன்முக்த் சந்த் (இளைஞர் அணி உலகக் கிண்ணத்தை வென்றவர்), போட்டியை புறக்கணித்துவிட்டு டெல்லியில் நடந்த இளைஞர் மாநாட்டில் உரையாற்ற சென்றுவிட்டார்.

அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த முன்னாள் அணித்தலைவர் கபில் தேவ், நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? ஏன் இங்கே வந்தாய்? பயிற்சிதான் உனக்கு முக்கியம் என்று கடுமையாகக் கண்டித்தார்.

மேலும் அவர் கூறுகையில், நான் பயிற்சியாளராக இருந்திருந்தால், கோடி ரூபாய் கிடைப்பதாக இருந்தாலும் உன்முக்த் இங்கு வர அனுமதித்திருக்கவே மாட்டேன்.

அவருக்கு உதைதான் கிடைத்திருக்கும் என்று கூறினார். மற்றொரு முன்னாள் அணித்தலைவரான அசாருதீனும், உன்முக்த் பயிற்சியில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்றும் பணிவாக நடந்து கொள்வதுடன் தீய பழக்கங்களுக்கு அடிமையாகிவிடக் கூடாது எனவும் ஆலோசனை வழங்கினார்.

## இங்கிலாந்தை வென்றது தென்னாபிரிக்கா



இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட 20-ருவென்ரி தொடரின் முதற் போட்டியில் தென்னாபிரிக்க அணி இலகுவாக வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் தென்னாபிரிக்க அணி 6 பந்துகள் மீதமிருக்க 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

றிவேர்ஸ் சைட் மைதானத்தில் இடம்பெற்றது. இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக் களை இழந்து 118 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக வீழ்த்தப்பட அவ்வணி 15.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றுத் தடு மாறியது.

அதன் பின்னர் 8வது விக்கெட்டுக்காக 33 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், இங்கிலாந்து அணி போட்டித்தன்மையான இலக்கொன்றைப் பெற முடிந்திருக்கவில்லை. துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக கிறெய்க் கீஸ்வெட்டர் 24 பந்துகளில் 25 ஓட்டங்களையும், கிரேம் ஸ்வான் 13 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும், ஸ்ருவேர்ட் ப்ரோட் 22 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

119 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 19 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜக்ஸ் கலிஸ் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், ஜே.பி.டுமினி ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார் பாக ஜேட் டேர்ண்பக் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஸ்டீவன் ஃபின் 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டேல் ஸ்ரெய்ன் தெரிவானார்.

## நாளைய போட்டியில் அப்ரிடி இல்லை

ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட 20-ருவென்ரி தொடரின் மூன்றாவது போட்டியிலும் ஷகிட் அப்ரிடி பங்குபற்றமாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவரது காயம் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவது போட்டியில் விரலில் காயமடைந்த ஷகிட் அப்ரிடி, முதலிரண்டு 20-ருவென்ரி சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றியிருக்கவில்லை.

இந்நிலையில் மூன்றாவது போட்டியிலும் பங்குபற்ற மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றாவது போட்டியில் ஷகிட் அப்ரிடி பங்குபற்றுவாரா எனக் கேட்கப்பட்டமைக்குப் பதிலளித்த அணியின் தலைவர் மொஹமட் ஹபீஸ், அதற்கான வாய்ப்புக்கள் இல்லை எனத் தெரிவித்தார்.

அத்தோடு ஷகிட் அப்ரிடி தனித்து நின்று போட்டிகளை வென்று கொடுக் கக்கூடியவர் எனத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், அதன் காரணமாக ஷகிட் அப்ரிடி அணித்தலைவரான தனக்கு முககியமான தெரிவாகக் காணப்படுவதாகத் தெரிவித்தார்.



இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 10.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.